Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு


தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
யாழ்ப்பாணம்.
021 222 3916, 0777 801038 (சி/2485)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 19 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ரஜப் 18 (04.09.2004) சனிக்கிழமை இதழ்:337

# பணயக்கைதிகளை மீட்பதற்கு ரஷ்யப் படையினர் தாக்குதல்!

**பணயம் வைக்கப்பட்டிருந்த பாடசாலை**




## 150 க்கு மேற்பட்டோர் பலி, 400 பேருக்கு மேல் காயம்

(மொஸ்கோ)

ரஷ்யாவின் பெஸ்லான் மாகாணத்திலுள்ள பாடசாலையில் கிளர்ச்சியாளர்களால் பணயக் கைதிகளாகப் பிடித்துவைக்கப்பட்டிருந்த மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை மீட்க ரஷ்ய கொமாண்டோப் படையினர் நடத்திய அதிரடித் தாக்குதல் நடவடிக்கையில் 150 பேர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை 9.05 மணியளவில் குறித்த பாடசாலைக்குள் வெடிகுண்டுச் சத்தங்களும், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் கேட்டதையடுத்து ரஷ்யப் படையினர் பாடசாலையை நோக்கிச் சென்றனர். இதன்பின்னர் - 9.30 மணியளவில் வெடிகுண்டுத் தகர்ப்பினால் பாடசாலையின் கூரை இடிந்து விழுந்தது. பின்னர், 9.58 மணியளவில் படையினர் பாடசாலைக் கட்டடத்துக்குள் நுழைந்தனர்.

இந்தத் தாக்குதலில் 150க்கும் மேற்பட்ட பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் பெற்றோர் ஆகியோர் கொல்லப்பட்டனர். பாடசாலைக் கூரை இடிந்து வீழ்ந்த காரணத்தினாலேயே பெருமளவு உயிர்ச்சேதம்



ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன. (12 ஆம் பக்கம் பார்க்க)

# சந்திரிகா அரசாங்கத்துக்கு இ.தொ.கா. பூரண ஆதரவு!

## தொண்டமான் நேற்று அறிவிப்பு



(கொழும்பு)

**சமாதான நடவழக்கையை முன்னெடுத்துச் செல்வதற்காகவும் அபிவிருத்திப் பணிகளைத் தடையின்றி மேற்கொள்வதற்காகவும் அரசாங்கத்துக்கு பூரண ஆதரவை வழங்கத் தீர்மானித்திருப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகம் தொண்டமான் அறிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே

பாக இ.தொ.கா. எந்தவித நிபந்தனைகளையும் அரசாங்கத்துக்கு

பிக்க வேண்டும்.

தற்போதைய நிலையில் அமைச்

## தலைமையுடன் ஆலோசிக்க கேணல் ரமேஷ் வன்னிக்கு!

(மட்டக்களப்பு)

கிழக்குப் பகுதி நிலைமை மற்றும் போர்நிறுத்த உடன்பாட்டைக் கடைப்பிடித்தல் என்பன தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்துடன் ஆலோசனை நடத்துவதற்காக புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் ரமேஷ் நேற்று கிளிநொச்சி சென்றுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## எம்மீது யுத்தத்தை திணித்தால் அதனை எதிர்கொள்ளத் தயார்!

### தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் தேசிய கட்சிகள் தமிழ்மக்கள் மத்தியில் மீண்டும் ஒரு யுத்தத்தைத் திணித்தால் அதனைச் சந்திக்க தமிழ்மக்களும், தமிழீழ விடுதலைப் புலிகளும் தயாராகவே உள்ளனர் என்று தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் மலையக மக்கள் முன்னணியின் தலைவர்

பெரியசாமி சந்திரசேகரன் நேற்று இடம் பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தச் சந்திப்பின்போது பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன. இந்தியாவின் ஆளும் மற்றும் எதிர்க் கட்சித் தலைவர்க

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளை கடந்த பல மாதங்களாக இ.தொ.கா. அவதானித்து வந்தது. அரசாங்கம் இழுபறி நிலையில் இருந்துவருவதாலேயே இந்தத் தீர்மாணத்தை எடுத்தோம்.

ஆதரவு வழங்குவது தொடர்பாக இ.தொ.கா. எந்தவித நிபந்தனைகளையும் அரசாங்கத்துக்கு விதிக்கவில்லை. எமது ஆதரவு தேவையா இல்லையா என்ற தீர்மானத்தை அரசாங்கமே எடுக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக அதிகாரசபையை அடிப்படையாகக் கொண்டு சமாதானப் பேச்சுக்களை அரசு ஆரம்பிக்க வேண்டும்.

தற்போதைய நிலையில் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்பது குறித்து இதுவரை தீர்மானிக்கவில்லை.

எமது ஆதரவின் மூலம் அபிவிருத்திப் பணிகளையும் சமாதான

(12 ஆம் பக்கம் பார்க்க)

சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெரியசாமி சந்திரசேகரனுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தத் தகவலை மலையக மக்கள் முன்னணியின் தலைவர்

வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன. இந்தியாவின் ஆளும் மற்றும் எதிர்க் கட்சித் தலைவர்களுடன் சந்திப்புக்களை மேற்கொண்டு தமிழ்மக்களின் தற்போதைய நிலை தொடர்பாக விளக்கமளிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாகரனுக்கான அழைப்பாணையை ரணிலின் முகவரிக்கு அனுப்ப உத்தரவு!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 1 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அழைப்பாணை பிறப்பித்தது.

இதற்கான அறிவித்தலை மேற்பார்த்து முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு நீதமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனோடு செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராக ஜே.வி.பி, சிஹலய உறுமய, சிங்கள ஜாதிக சங்கம் ஆகிய கட்சிகளும், திலக் கருணாரத்னவும் சமர்ப்பித்த மனுக்களை ஆராய்ந்த பின்னரே இந்த உத்தரவை மேல் நீதிமன்றம் நேற்று விடுத்தது.

இந்த மனுக்களின் பிரதி வாதிகளாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, (12 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய கடற்படை தலைமை தளபதி அடுத்த வாரம் கொழும்பு வருகிறார்!

(புதுடெல்கி)

இந்தியக் கடற்படையின் தலைமைத் தளபதி அட்மிரல் அருண் பிரகாஸ் அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவிருப்பதாக இந்தியக் கடற்படைத் தலைமையகத் தகவல்கள் தெரிவித்தன.

அட்மிரல் அருண் பிரகாஸ் எதிர்வரும் 12 ஆம் திகதி இலங்கைக்கு தனது உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளபோதும், இந்த உத்தியோக பூர்வ விஜயம் குறித்த மேலதிக விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இவர், தனது விஜயத்தில் இலங்கைக் கடற்படை மற்றும் படை உயர் அதிகாரிகளையும் முக்கிய அரசியல் தலைவர்களையும் சந்தித்து பிராந்திய பாதுகாப்பு நிலைமைகள் குறித்து பேச்சு நடத்துவார் என்று கருதப்படுகிறது.

அத்துடன், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள கடற்படைத் தளங்களுக்கும் விஜயம்செய்து பாதுகாப்பு நிலைமைகளை இவர் நேரில் பார்வையிடுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அட்மிரல் அருண்பிரகாஸ் கடந்த ஜுலை 31 ஆம் திகதிதான் இந்தியக் கடற்படையின் தலைமைத் தளபதியாகப் பொறுப்பேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடற்படைத் தளபதியான இவர்,



ஒரு சிறந்த விமானியுமாவார். பாகிஸ்தானுடனான போரில் இவர் போர் விமான ஓட்டியாகப் பங்கேற்றிருந்தார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இந்தியக் கடற்படையின் முன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

## மருத்துவ பீட மாணவி

# புஸ்பமாலாவுக்கு வழங்கி வந்த ஆதரவை

# மாணவர் ஒன்றியம் முற்றாக நிறுத்தியது!

## உண்மை நிலையை விளக்கி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவி கி.புஸ்பமாலா முன்வைத்த கோரிக்கைகளுக்குத் தாம் வழங்கிய ஆதரவை நிறுத்துவதாக யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

மாணவிக்குத் தாம் வழங்கிய ஆதரவை அவரது நடவடிக்கையால், நிறுத்துவதாகத் தெரிவித்து, நேற்று மாலை அனுப்பிவைத்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடந்த ஜுலை மாதம் 7 ஆம் திகதி மருத்துவபீட மாணவி கி. புஸ்பமாலாவின் உண்ணாவிரதப் போராட்டத்தில் - மாணவர் ஒன்றியம் தலையீடுசெய்து, உண்ணா விரதப்போராட்டம் கைவிடப்பட்டது என்பதும், அவருடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை மாணவர்கள் தமது விரிவுரைகளைப் பகிஷ்கரிப்பது என்றும் உறுதிமொழி அளிக்கப்பட்டது.

உண்மையில் அன்றைய தினம் மாணவர் ஒன்றியம் தலையீடு செய்ததன் நோக்கம் அந்த மாணவியினுடைய கோரிக்கையின் அடிப்படையிலல்ல என்பதையும், அவருடைய உடல்நிலை பாதிப்படையக்கூடும் என்ற மனிதாபிமான நோக்கத்துக்காகவே தலையிட்டது.

இவருடைய பிரச்சினையில் மாணவர் ஒன்றியம் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டது என்பது வெளிப்படையான உண்மை. அந்தவகையில், இவரது பிரச்சினை தொடர்பான தீர்வினை அவர் உண்ணாவிரதப் போராட்டம் தொடரமுன்னரே பெற்றுக்கொடுக்க உறுதியளித்தோம்.

2003 ஆம் ஆண்டு நடைபெற்ற 2 ஆவது எம்.பி.பி.எஸ் பரீட்சை விடைத்தாள்களை மீள்திருத்தம் செய்ய உறுதியளித்தோம். இதற்கு மருத்துவபீடாதிபதியும் உடன்பட்டிருந்தார். மேலும், இவர் மீண்டும் ஒரு தடவை பரீட்சை எடுப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

வேறு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பதற்கான சிபார்சை பெற்றுத்தருவதாக உறுதியளிக்கப்பட்டதுடன், துணை வேந்தரும் அதனை ஏற்றுக்கொண்டார்.

இவருடைய கல்வியைத் தொடர்வதற்கான நிதிவசதிகளை மருத்துவ பீட மாணவர் ஒன்றியமும், பல்கலைக்கழக நல்ச்சேவைக் கிளைகள் ஊடாகவும் மேற்கொள்வதாக உறுதியளிக்கப்பட்டது.

இவையனைத்தும் ,இந்த மாணவி உண்ணாவிரதப் போராட்டம் தொடர முன்பு இணக்கம் காணப்பட்ட விடயங்களாக மாணவர் ஒன்றியத்தினால் வழங்கப்பட்டது.

ஆனால், உண்ணாவிரதம் தொடர்ந்தபோதும், பரீட்சை விடைத்தாள்களின் மீள்திருத்தம் மட்டும் தான் இணக்கம் காணமுடியாதிருந்தது.

மறுநாள் மாலை 7 மணிவரை எந்தவகையிலும் இணக்கப்பாடு எட்டாததினால், அந்த மாணவியினுடைய உடல் நிலை பாதிப்புக்குள்ளாகும் என்ற மனிதாபிமான அடிப்படையில்தான் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தலையிட்டது.

இதனடிப்படையில், ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டு அதனைக் குறிப்பிட்ட மாணவி அனைத்துப் பீட மாணவர் தலைவர்கள் முன்னிலையில் முற்றுமுழுதாக ஏற்றுக் கொண்டார்.

தற்போது அந்த ஆலோசனைக் குழு ஊடாக பேரவையின் அனுமதியுடன் பரீட்சை தொடர்பான பின்வரும் முடிவு எடுக்கப்பட்டது.

2003 ஆம் ஆண்டு ஜூலை மாதம நடைபெற்ற இரண்டாவது எம்.பி.பி.எஸ் பரீட்சை விடைத்தாள்களை மீள்பரிசீலனை செய்வதெனவும், அந்தப் பரீட்சை விடைத்தாள்களை மீள் பரிசீலனைக்குக் கொண்டு செல்லும் பொழுது விடைத்தாள்கள் இவருடையதுதான் என அவர் முன்னிலையில் உறுதிப்படுத்தப்பட்டு, கொண்டு செல்லப்படும் எனவும்.

இன்னுமொரு தடவை இரண்டாவது எம்.பி.பி.எஸ் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும், அந்தச் சந்தர்ப்பத்தில் அவருக்குரிய சகல வசதிகளுஞ் வழங்கப்படுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த முடிவுகளை மாணவர் ஒன்றியம் முற்றுமுழுதாக ஏற்றுக் கொண்டு, கல்வியைத் தொடருமாறு கோரியபோதும், எமது முடிவுக்கு மாறாக வெளிநபர்கள் மூலம் துணை வேந்தரைத் தடுத்துவைப்பது போன்ற அடாவடித்தனத்தில் ஈடுபடுவதும் எமது வளாகத்தில் ஒன்றியத்துக்குக் கட்டுப்படாமல் போராட்டம் நடத்துவதையும் மாணவர் ஒன்றியம் ஏற்றுக்கொள்ளாது.

இந்த முடிவுகளுக்கு முரணாகச் செயற்பட்ட கி.புஸ்பமாலா தொடர்பாக, இனி நிர்வாகம் எடுக்கும் எந்த நடவடிக்கைகளுக்கும் மாணவர் ஒன்றியம் உடன்படும் எனத்தெரிவித்துக்கொள்கிறோம் என யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தெய்வீக இசையரங்கு

(மானிப்பாய்),

நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவகாலத்தை முன்னிட்டு, நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் - நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று மாலை 6.30 மணியிலிருந்து 7.30 மணிவரை தெய்வீக இசையரங்கின் 15 ஆம் நாள் நிகழ்வு இடம் பெறும்.

இதில், தவநாதன் றொபேட்டின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும். (100)

## 10 ஆண்டு நிறைவு விழா

(மானிப்பாய்)

மானிப்பாயில் அமைந்துள்ள கியூமெடிக்கா நிறுவனம் தனது சேவையின் 10 ஆம் ஆண்டு நிறைவு விழாவினை இன்று மானிப்பாயிலுள்ள தனது நிலையத்தில் கொண்டாடுகின்றது.

இந்த நிறுவனம் - வறுமைக் கோட்டின் கீழுள்ள மக்களுக்கு, சேவையின் அடிப்படையில் பல சமூகநல அபிவிருத்தித் திட்டங்களைச் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. (100)

## இளைப்பாற்று மண்டபம் இன்று திறப்பு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேசசபையால் நிர்மாணிக்கப்பட்ட மீனவர்கள் இளைப்பாற்று மண்டபம் திறப்பு விழா இன்று 11 மணிக்கு பிரதேசசபை செயலாளர் சி.பசுபதி தலைமையில் நடைபெறும்.

இந்தநிகழ்வில் - பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதனும், சிறப்பு விருந்தினர்களாக- யாழ். மாவட்ட நியாப் திட்டப் பணிப்பாளர் கா.பாலகிருஷ்ணன், யாழ். மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க. இராசையா, வடமராட்சி கிழக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் எஸ்.தீபன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (14)

## விவேகானந்தா வித்தியாசாலை நிறுவுநர் நூற்றாண்டு விழா

(மானிப்பாய்)

மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலையின் நிறுவுநர் சுவாமிநாதன் கனகரட்ணம் லோட்டனின் நூற்றாண்டு விழாவுடன் கூடிய வித்தியாசாலையின் நூலகத் திறப்பு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாசாலையின் அதிபர் திருமதி க.சரவணபவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தவிழாவில் - பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனும், சிறப்பு விருந்தினர்களாக - வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கமும், கௌரவ விருந்தினர்களாக மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் செ.கேசவராஜனும், சுதுமலை சிந்மயபாரதி வித்தியாசாலை அதிபர் த.தர்மசோதி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தநிகழ்வில் - மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், கலை நிகழ்வுகளும் , நூற்றாண்டு விழா மலர் வெளியீடும் இடமபெறும். (91,100)

## அலங்கார உற்சவமும் கும்பாபிஷேகமும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பெருமாள் அம்பாள் ஆலய (சக்திகோவில்) வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.


நமது ஈழநாடு

### இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை, இலக்கிய - போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

**போட்டிக்கான விதிகள்**

**சிறுகதை மற்றும் கவிதைப் போட்டி**

- படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும் - மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.
- சிறுகதைகள் யாவும் தெளிவான எழுத்திலோ, தட்டச்சு செய்யப்பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் - தட்டச்சில் 5 பக்கங்களுக்குள்ளும் இருப்பது அவசியம்.
- கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 30 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்கள் யாவும் சமகால சமூகவியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.
- ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

**புகைப்படப் போட்டி**

- புகைப்படத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் தொழில் சார் கலைஞர்கள் எவரும் இதில் பங்குபற்றலாம் - வயது வேறுபாடில்லை.
- போட்டிக்கு அனுப்பப்படும் படங்கள் கறுப்பு வெள்ளைப் படங்களாகவும் இருக்கலாம். வண்ணப்படங்களாகவும் இருக்கலாம். அளவு 6 X 4 அங்குலம் ஆக இருத்தல் அவசியம்.
- புகைப்படங்கள் - எமது மண்ணின் இயற்கையழகு எமது மண்ணின் பாரம்பரியம், சமகால வரலாற்றுப் பதிவுகள் ஆகியவற்றைப் பதிவு செய்ததாக இருக்கவேண்டும்.
- ஒருவர் மூன்று படங்கள் வரை அனுப்ப முடியும். ஆனால் ஒரு படத்துக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
- புகைப்படங்களுடன் பெயர் விலாசம் போன்றவை தனியாக இணைக்கப்படல் வேண்டும்.
- அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

**கையெழுத்து சஞ்சிகை உருவாக்கல் போட்டி**

*நிபந்தனைகள்*

இந்தப் போட்டி இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும்.

1. பாடசாலை மாணவர்களுக்கானது.
2. தனிநபர் - தனியார் அமைப்புக்களுக்கானது

பாடசாலை மாணவர்களுக்கான போட்டி மத்திய பிரிவு - மேற்பிரிவு என இரு பகுதிகளாக நடத்தப்படும்.

மத்திய பிரிவு- க.பொ.த (சாதாரண) தரத்திற்கு உட்பட்டவர்களுக்குரியது.

மேற்பிரிவு - அதற்கு மேற்பட்டவர்களுக்குரியது.

- போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் சஞ்சிகைகள் மாணவர்களின் சுய படைப்பாற்றல் மற்றும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துபவையாக இருக்க வேண்டும்.
- சஞ்சிகைகள் 40 முதல் 50 பக்கங்கள் வரையுள்ளதாகவும் ஒரு அழகான கலைத்துவமான சஞ்சிகைக்குரிய தரமான வடிவமைப்புக் கொண்டதாகவும் தெளிவான கையெழுத்துக்களில் எழுதப்பட்டவையாகவும் இருத்தல் வேண்டும்.
- தனிநபர்கள் - தனியார் அமைப்புகள் ( இலக்கிய வட்டாங்கள் - சனசமூகநிலையங்கள்) அனுப்பிவைக்கும் சஞ்சிகைகளும் மேற்குறிப்பிட்ட விதிகளை அனுசரிக்க வேண்டும்.
- மாணவர்கள் தங்களின் சஞ்சிகை தயாரிப்பில் தமது ஆசிரியர்களின் ஆலோசனைகளை நாடமுடியும்.
- மிகத் தரமானதெனத் தேர்தெடுக்கப்படும் - சஞ்சிகைகளுக்குரிய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய ஆக்கங்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்.
- சஞ்சிகைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 15.09.2004
- பதிவுத்தபாலில் அனுப்புதல் பாதுகாப்பானது - நேரிலும் கையளிக்கலாம்.
- பாடசாலை மாணவர்களின் சஞ்சிகைகள் பாடசாலை வகுப்பாசிரியர் அல்லது அதிபரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

**குறிப்பு:-** இப்போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற முடியாது.

போட்டிக்கான ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:- நமது ஈழநாடு - 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



**The Royal College of Jaffna**

ஆங்கிலத்தில் சுலபமாக 6 மாத காலத்தில் கதைக்கப்பயில கட்டணம் மாதாந்தம் 150\=
By:விக்னேஸ்வரன் ஆச்சாரி: 426, (302) K.K.S.வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை (C/2734)

சிறு விளம்பரம்

**ஆட்டோ சாரதி தேவை**

சாரதி அனுமதிப்பத்திரத்துடன் வரவும். M.G.M 777 K.K.S Road, Jaffna. (C/3025)

**ராஜா** யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த
**மதுர**
(முக்கிய அறிவித்தல்) காட்சிநேரம் மாற்றப்பட்டுள்ளது 10.00, 2.00, 6.00, 9.00 (பு.நே)
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம் (சி-2725)



**நிறஞ்சனாஸ்** சங்கானை

சேரன், சிநேகா நடித்த
**ஆட்டோகிராஃப்**
காட்சி நேரம்: 11.00.2.45.6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே) Strike Force (சி-2723)

**நாகம்ஸ்** சுன்னாகம்

கமல், சினேகா, பிரபு நடித்த



**வசூல்ராஜா MBBS**
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)



**மொழி பெயர்ப்பாளர் தேவை**

ஆங்கில நூல்களை தமிழாக்கம் செய்யத் தகுதியுடையோர் தேவை. அவர் தம் தகைமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு தமது தகைமைகளை அனுப்பிவைக்கவும்.

யோ.யோகி,
217, உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி.

(சி-2818)

# பட்டதாரிகள் நியமனத்தை அரசாங்கம் ஏமாற்றுகிறது

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுக்கொடுக்கும் தற்போதைய அரசாங்கத்தின் திட்டத்தில் பல குறைபாடுகள் உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தத் திட்டத்தின்மூலம் பட்டதாரிகள் ஏமாற்றப்படுவதாக எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் அதுலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பட்டதாரிகளுக்கான நியமனங்கள் நிரந்தரமானது அல்ல. அரசாங்கத்தின் திட்டத்தில் பொதுவான பட்டத்தைப் பெற்றவர்களும், சிறப்புப் பட்டத்தையும் பெற்றவர்களும் ஒரே மாதிரியாகக் கணிக்கப்படுகின்றார்கள். இதனால், கல்வித் தகைமை கூடியவர்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது.

சிறிய தாமதமானாலும் குறைபாடுகளை நீக்கி முறையான விதத்தில் திட்டத்தை அமுல் செய்திருக்கலாம்.

பட்டதாரிகளின் வேலை வாய்ப்பற்ற பிரச்சினையைத் தீர்க்கும் நிலையான திட்டம் எமது கட்சியிடம் இருந்ததாக ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

# நோர்வேக்கு எதிராக வழக்கு புளொட் அமைப்பு கண்டனம்!

(கொழும்பு)

நோர்வே தரப்பின் நடவடிக்கைகளுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டமையை புளொட் வன்மையாகக் கண்டித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு வழங்குவதுடன், இராணுவ உதவிகளையும் வழங்குவதாக நோர்வே அனுசரணையாளர்களுக்கு எதிராகக் குற்றஞ்சாட்டி, அவுஸ்ரேலியாவிலுள்ள இலங்கை மனித உரிமைகள் எனும் பெயரில் சிங்கள இனவாத அமைப்பொன்று சர்வதேச நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளமையை புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் நடைபெறும்போது இவ்வாறான பேரினவாத அமைப்புகள் குழப்பங்களை ஏற்படுத்த முயல்வது வழமையாகிவிட்டது. பண்டா - செல்வா ஒப்பந்தம் முதல் சகல சமாதான முயற்சிகளின்போதும் இவ்வாறான அமைப்புகள் தீர்வுத்திட்டங்களுக்கு எதிராகச் செயற்பட்டுவந்துள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளினதும், இலங்கை அரசினதும் வேண்டுகோளுக்கிணங்கவே நோர்வே சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது என்பதை சம்பந்தப்பட்ட அமைப்புகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

யுத்தத்தின் கொடூரங்களை அனுபவியாமல் வெளிநாடுகளில் சொகுசுவாழ்வை நடாத்தும் இவர்களின் இனவாத, யுத்தத்தைத் தூண்டும் நடவடிக்கைகள் நாட்டை மீள முடியாத அழிவுக்கே இட்டுச்செல்லும.

சமாதானத்தை விரும்பும் அனைத்துத் தரப்பினரும் இதனைக் கண்டிகக முன்வரவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார. (01)

# வாக்களிப்பில் அடையாள அட்டையை கட்டாயமாக்கும் சட்டமூலம் பிரேரணை

## விரைவில் நிறைவேற்ற கட்சிகள் இணக்கம்

தேர்தலில் வாக்களிக்கும் வாக்காளரின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக, வாக்களிப்பில் தேசிய அடையாள அட்டையைக் கட்டாயப்படுத்தும் பிரமாணங்கள் அடங்கிய சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இணங்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டது.

அரசியல் கட்சிகளின் சிரேஷ்ட தலைவர்களுடன் ஆட்பதிவுத் திணைக்களம், தேர்தல் ஆணையாளர் அலுவலகம் ஆகியவற்றின் தலைவர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படுமானால், அடையாள அட்டைகள் இல்லாத சகலருக்கும் 6 மாத காலத்துக்குள் அவற்றைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க முடியும் என ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் சுட்டிக் காட்டினார்.

இந்தக் கூட்டத்தில் தேர்தல் ஆணையாளரும் தேசிய அடையாள அட்டையைக் கட்டாயமாக்கும் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்.

தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு-கிழக்கிலுள்ள மக்களுக்கு அடையாள அட்டையை விநியோகிப்பதிலுள்ள சிக்கல்கள் பற்றி பிரஸ்தாபித்தனர்.

எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும் அரசியல் கட்சிகளின் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கான திகதி நிர்ணயிக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

# பிரதான அரசியல் கட்சிகள் இணைந்து தமிழர் பிரச்சினையை தீர்க்க வேண்டும்

## ஜாதிக ஹெல உறுமய கூறுகிறது

சிறிலங்கா சுதந்திக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றுக்கிடையில் கருத்தொற்றுமையை ஏற்படுத்தி, வடக்கு - கிழக்கு நெருக்கடிகளுக்குத் தீர்வுகாண முற்பட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

தற்போதைய தருணத்தில் அரசியல் அதிகாரப் போராட்டங்களை தற்காலிகமாகவேனும் மறந்து விடுமாறு, ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் சங்கைக்குரிய எல்லாவெல மெத்தானந்த தேரர் கோரிக்கை விடுத்தார்.

நாட்டைப் பிளவுபடுத்தும் ஆயுதங்களைச் சேகரிக்கும், சிறுவர்களைப் போராளிகளாகப் பயன்படுத்தும் நடைமுறைகளிலிருந்து விலக வேண்டும் என விடுதலைப் புலிகளுக்கு நிபந்தனை விதிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தவிடயம் தொடர்பாக இரண்டு பரதான கட்சிகளுடனும் உத்தியோக பூர்வப் பேச்சுவார்த்தைகளை ஆரம் பிக்கப்போவதாக சங்கைக்குரிய மெத்தானந்த தேரர் குறிப்பிட்டார்.

# புலிகளுடன் பேச்சுக்கு முன் சர்வ கட்சி மா நாட்டுக்குத் திட்டம்

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னர் சர்வ கட்சி மாநாடு ஒன்றை நடத்துவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இந்தச் சர்வகட்சி மாநாட்டுக்கு ஆதரவைப் பெறும் வகையில், விஞ்ஞான தொழில்நுட்பத்துறை அமைச்சர் திஸ்ஸ விதாரண நேற்று முன்தினம் மல்வத்த மகாநாயகர் திப்பட்டுவே ஸ்ரீ சுமங்கள தேரோவைச சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

சமாதானப் பேச்சுக்கள் குறித்த அரங்கில் இந்த யோசனையை ஏற்றுக்கொண்ட மகாநாயக்க தேரர் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் மத்தியில் ஒருமித்த இணக்கத்தை ஏற்படுத்தி, அதன் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு தாம் தமது ஆதரவை வழங்குவதாக உறுதியளித்தார்.

நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த எண்ணத்துடன், தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அரசு பேச்சு நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது ஆரோக்கியமான செயலாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (01)

# சந்திரிகாவின் உத்தரவை புறக்கணித்து கட்டட அடிக்கல்லை நாட்டினார் பிரதமர்

(கொழும்பு)

சுதந்திரக் கட்சியின் புதிய கட்டடத்துக்கான அடிக் கல்நாட்டும் விழாவைப் பின்போடும்படியும், தான் நாடு திரும்பியதும் பெரிய விழாவாக இதை நடாத்தலாம் என் றும் ஜனாதிபதி சந்திரிகா லண்டனிலிருந்து எழுத்து மூலம் கேட்டுக் கொண்டிருந்தும்கூட, அந்த வேண்டுகோளைப் புறக்கணித்து, அடிக்கல்நாட்டுவிழாவைப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது தலைமையில் நடாத்தியுள்ளார்.

இந்த விழாவில் ஜனாதிபதி சந்திரிகா கலந்து கொள்வார் என்று பலர் எதிர்பார்த்தபோதும், லண்டனிலிருந்து பிரான்ஸுக்கு இரகசியப் பயணமொன்றை ஜனாதிபதி மேற்கொண்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இந்தநிலையில், இக்கட்டட அடிக்கல்நாட்டுவிழாவை, தான் கொழும்பு வரும்வரை பிற்போடும்படி சந்திரிகா கேட்டுக்கொண்டிருந்தபோதிலும், அதைப் புறக்கணித்து, ஜனாதிபதியின் பெயர்பொறித்த நினைவுக் கல்லை, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ திறந்து வைத்தார்.

சந்திரிகா கலந்துகொள்ளவிலலை என்பதால், லக்ஷ்மன் கதிர்காமர், மங்கள சமரவீர, அநுரா பண்டாரநாயக்க போன்ற முக்கிய அமைச்சர்கள் இந்தவிழாவில் கலந்து கொள்ளவில்லை.

கட்டடத்துக்கான அத்திவாரக் கல்லைக் கிறங்குவைக்க பிரகமர் மகிநத ராஜபக்ஷவை உரை நிகழ்த்தும்படி கேட்டபோது, உரைநிகழ்த்த மறுத்துவிட்டதாகத் தெரியவருகிறது. இருப்பினும் இங்கு வரவேற்புரை நிகழ்த்திய கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி சந்திரிகாவின் வாழ்த்துக்களையும் தெரிவித்ததாகத் தெரியவருகிறது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணிக்குள்ளும், சுதந்திரககட்சிக்குள்ளும் கருத்துமோதல்கள் வலுத்துவருவதை இது சுட்டிககாட்டுவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், எதிர்வரும் செவ்வாய்க்கிழமையே ஜனாதிபதி சந்திரிகா நாடு திரும்பவுள்ளதாகவும், அவர் திரும்பியதும் பல முக்கிய திருப்பங்களை எதிர்பார்க்கலாம் என்றும் ஜனாதிபதி செயலக வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

## தமது கட்சி அமைச்சர்களையும்

# பிரதிவாதிகளாக சேர்க்கும்படி ஜே.வி.பி. மீளவும் மனுத்தாக்கல்

(கொழும்பு)

அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் தமது கட்சி உறுப்பினர்களையும், பிரதிவாதிகள் பட்டியலில் இணைத்துக் கொள்ளுமாறு கோரி ஜே.வி.பி மீள்பரிசீலனை மனு ஒன்றை நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளது.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை செல்லுபடியற்றதாக்க கோரி, ஜே.வி.பி மற்றும் சிஹல உறுமய ஆகிய கட்சிகள் தாக்கல் செய்த வழக்கில் நேற்று முன்தினம் மீளாய்வு மனு ஒன்று சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியின்போது, பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க - விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் செய்து கொண்ட யுதத நிறுத்த ஒப்பந்தமானது - நாட்டின் இறைமைக்குக் குந்தகம் ஏற்படுத்தும் எனக் குற்றஞ்சாட்டிய இந்த கட்சிகள் ஐக்கிய தேசிய கட்சித் தலைவரும், முன் னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க உட்பட அவரின் தலைமையில், அமைச்சரவையில் அங்கம் வகித்த அமைச்சர்களை பிரதி வாதிகளாகக் குறிப்பிட்டு இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தன.

தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவி ஏற்றுள்ள நிலையில், தொடர்ந்தும் அந்த ஒப்பந்தம் அமுல் செய்யப்படுவதால், தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான 33 பேர் கொண்ட அமைச்சரவையைப் பிரதிவாதிகள் தரப்பில் இணைத்துக் கொள்ள வேண்டும் என ஜே.வி.பி ஏற்கனவே நீதிமன்றில் கோரிக்கை விடுத்திருந்தது. அதனை நீதிமன்றமும் ஏற்றுக்கொண்டிருந்தது.

இந்த நிலையில் அமைச்சரவையில் அமைச்சர்களாக அங்கம் வகிக்கும் தமது கட்சியின் நான்கு உறுப்பினர்களையும் நீதிமன்றம் பிரதிவாதிகளாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஜே.வி.பி தனது மீள்பரிசீலனை மனுவில் வேண்டுகோள்விடுத்துள்ளது.

# அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குங்கள்!

## நிதியமைச்சரிடம் லால் கந்த வேண்டுகோள்

வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கும் வகையில் எதிர்வரும் வரவு - செலவுத்திட்டத்தில் அரச ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்படும் என்று உறுதிப்படுத்துமாறு ஜே.வி.பியைச் சேர்ந்த அமைச்சரான கே.பி.லால்காந்த நிதியமைச்சர் சரத் அமுனுகமவிடம் கேட்டுள்ளார்.

நிதியமைச்சர் அந்த உறுதிமொழியை வழங்க வேண்டும் என்று தாம் இந்த ஆலோசனையை முன்வைத்ததாக அவர் தெரிவித்தார்.

அகில இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் சார்பாக நிதியமைச்சருக்கு எழுதிய கடிதத்திலேயே அமைச்சர் லால் காந்த இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அரசாங்கத்துக்கு எவ்வளவு கஷ்டங்கள் இருந்தபோதிலும், உழைக்கும் வர்க்கத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், கட்டாயமாக சம்பள உயர்வு பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று அந்தக் கடிதத்தில் மேலும் அவர் குறிப்பிட்டார்.

# தமிழீழ விடுதலைப் புலிகளை சந்திப்பதற்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவையில்லை

## ஜே.வி.பியினர் தெரிவிப்பு

தங்கள் மேல் கொடுக்கப்படும் அழுத்தத்தைத் தணிக்கும் நோக்கோடு, விடுதலைப் புலிகள் தங்களை அழைத்துப்பேச விரும்பினால் நேரடியாக அழைத்துப் பேசலாம் என்றும், இடையில் மத்தியஸ்தம் செய்ய யாரும் அவசியமில்லை என்றும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி.சந்திரசேகரன் அண்மையில் ஜே.வி.பி.க்கு விடுத்த வேண்டுகோளில், அவர்கள் விடுதலைப் புலிகளை நேரில் சந்தித்து, தங்கள் கருத்துக்களை விவாதிக்க விரும்பினால், தான் அத்தகைய சூழ்நிலையை உருவாக்க முயற்சியெடுக்கத் தயாராயுள்ளதாகத் தெரிவித்தார்.

பி.சந்திரசேகரன் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து, பல தரப்பினரிடமிருந்தும் இந்த முயற்சியை ஜே.வி.பி. ஏற்றுக்கொண்டு, தங்கள் கருத்து வேற்றுமைகளைச் சீராக்க முயற்சிக்க வேண்டுமென அழுத்தம் கொடுக்கப்பட்டது. இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜே.வி.பி. இவ்வாறு தெரிவித்துள்ளது.

# வட இலங்கை சங்கீதசபை பரீட்சைக்கு விண்ணப்பம்


வட இலங்கை சங்கீதசபையால் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடத்தப்பட இருக்கும் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுகின்ற இந்தப் பரீட்சைக்கு அதிக எண்ணிக்கையான மாணவர்கள் தோற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

இந்த வருடமும் இந்தப் பரீட்சைக்குப் பெருமளவான மாணவர்கள் விண்ணப்பிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் அடுத்த மாத ஆரம்பத்தில் சங்கீதசபை அலுவலகத்தால் விநியோகிக்கப்பட இருப்பதாகச் சங்கீதசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

# அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டி; செரீனா, ஹெனின் 3 ஆவது சுற்றில்



அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டியில் அமெலி மவுரெஸ்மோ, செரீனா வில்லியம்ஸ் ஆகியோர் 3 ஆவது சுற்றுக்குத் தகுதிபெற்றனர்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டி நியூயோர்க்கில் நடைபெற்று வருகிறது.

இதன் பெண்கள் பிரிவில் நடந்த 2 ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் 2 ஆம் நிலை வீராங்கனை அமெலி மவுரெஸ்மோ (பிரான்ஸ்) 3-6, 6-2, 6-2 என்ற செட் கணக்கில் உக்ரைன் வீராங்கனை ஜூலியாவைத் தோற்கடித்து 3 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் 8 ஆம் நிலை வீராங்கனை ஜெனிபர் கப்ரியாட்டி (அமெரிக்கா) 6-0, 6-2 என்ற நேர் செட்டில் மாகுசென்னாவை (ஸ்பெயின்) வென்று 3 ஆவது சுற்றுக்கு தகுதிபெற்றார்.

இன்னொரு ஆட்டத்தில் 3 ஆம் நிலை வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) 6-4, 6-3 என்ற நேர் செட்டில் சக நாட்டு வீராங்கனை லின்ட்சே லீ வாட்டெர்ஸ்சை-தோற்கடித்து 3 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

பெண்களுக்கான ஒற்றையர் பிரிவின் 2 ஆவது சுற்றில் உலகின் முதல் நிலை வீராங்கனையான ஜஸ்டின் ஹெனின் (பெல்ஜியம்) இஸ்ரேலைச் சேர்ந்த டிஸிப்பேராவை எதிர்கொண்டார்.

இதில் ஹெனின் 6-2, 5-7, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று 3 ஆவது சுற்றில் நுழைந்தார். மற்ற ஆட்டங்களில் ஷரபோவா (ரஷ்யா), ஜெலினாவை (செர்பியா) 6-0, 6(5)-7(7), 6-1 என்ற கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றில் நுழைந்தார்.



பல்கேரிய வீராங்கனை மக்டலீனா 2 ஆவது சுற்றில் தோல்வியடைந்தார். அவரை அமெரிக்க வீராங்கனை ஏஞ்சலா 6-2, 6-3 என்ற நேர் செட்டில் வீழ்த்தினார்.

மற்றும் டானிலா ஹன்ட் ஷோவா (ஸ்லோவாக்கியா), எலீனா டெமென்டிவா (ரஷ்யா), வெராசுனாரெவா (ரஷ்யா), வெரா டச்வினா (ரஷ்யா),



பிரான்செஸ்கா (இத்தாலி), மரியா வென்டோ (வெனிசுலா), ஜெலீனா கோஸ்டானிக் (குரோஷியா), அய் சுஜியாமா (ஜப்பான்), நாதலி டெசி (பிரான்ஸ்), தாதியானா குளோவின் (பிரான்ஸ்). தாதியானா கார்பின் (இத்தாலி) பட்டி ஷிடெர் (சுவிற்சர்லாந்து) ஆகியோர் 2 ஆவது சுற்றில் வெற்றிபெற்றனர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் முதல் சுற்று ஆட்டத்தில் முதல் நிலை வீரர் ரோஜர் பெடரர் (சுவிற்சர்லாந்து) 6-2, 6-7 (4-7), 6-3, 6-1 என்ற செட் கணக்கில் மார்கோஸ்சை (சைப்பிரஸ்) தோற்கடித்து 2 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

4 ஆம் நிலை வீரரான லெய்டன் ஹெவிட் (அவுஸ்ரேலியா) 6-1, 7-5, 6-4 என்ற நேர் செட்டில் வாயனெ பெரீராவை (செக் குடியரசு) தோற்கடித்து 2 ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

பிரேசில் வீரர் குயர்டன் முதல் சுற்றிலேயே அதிர்ச்சித் தோல்வியடைந்தார். அவரை டென்மார்க் வீரர் கிறிஸ்டியன் 6-4, 3-6, 6-1, 7-6 (7-4) என்ற செட் கணக்கில் வீழ்த்தினார்.

மற்றும் டம்மி ஹாஸ் (ஜெர்மனி), நிகோலாய் (ரஷ்யா), வின்சென்ட் (அமெரிக்கா), டேவிட் சான்செஸ் (ஸ்பெயின்), பிலிப் (ஜெர்மனி), தோமஸ் கெடோலா (பின்லாந்து), ரிச்சார்டோ மெலோ (பிரேசில்), றொபின் சோடெர்லிங் (சுவீடன்), டேவிட் நல்பாண்டியன் (ஆர்ஜென்ரீனா), செபாஸ்டியன் குரோஜன் (பிரான்ஸ்), அர்னாட் (பிரான்ஸ்), ஜுர்கென் (ஒஸ்ரியா), கரோல் பெக் (ஸ்லோவாக்கியா), மிகைல் (ரஷ்யா) ஆகியோரும் முதல் சுற்றில் வெற்றிபெற்றனர்.

# இந்தியாவுக்கு பயிற்சியளிக்க ஜொன்டி றொட்ஸ் விருப்பம்!



(ஜொகனஸ்பேர்க்)

தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் ஜொன்டி றொட்ஸ் களத்தடுப்பில் மிகவும் திறமை வாய்ந்தவரெனப் பெயர்பெற்றவர். அவர் இந்திய அணிக்கு பயிற்சியளிக்க விரும்புவதாகத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது -

இந்திய அணியில் தற்போது யுவராஜ், கை.்ப் ஆகிய இருவரும் மிகச் சிறந்த களத்தடுப்பாளர்களாக உள்ளனர். டெண்டுல்கரும் மிகச்சிறந்த களத்தடுப்பாளாராக உள்ளார். வாய்ப்புக் கிடைத்தால் இந்திய அணிக்குப் பயிற்சியளிக்கத் தயாராகவுள்ளேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

மேலும் அவர் இந்திய ஹொக்கி அணியையும் பாராட்டினார். இது தொடர்பாக அவர் மேலும் கூறும்போது -

இந்திய ஹொக்கி அணி ஒலிம்பிக்கில் ஆடிய ஆட்டங்களை தொலைக்காட்சியில் பார்த்தேன். வெற்றிபெறாவிட்டாலும் அவர்களின் ஆட்டம் நேர்த்தியாக இருந்தது என்றார்.




# ஒலிவ் இலை மீதான தடை நியூஸிலாந்து விலக்கியது!

(வெலிங்டன்)

ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வென்ற வீரர்கள் ஒலிவ் இலை வளையங்களை தங்களுடன் கொண்டுவர விதிக்கப்பட்ட தடையை நியூஸிலாந்து அரசு நீக்கியுள்ளது.

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வென்ற நியூஸிலாந்து வீர வீராங்கனைகளுக்கு சமீபத்தில் ஒரு அதிர்ச்சி செய்தி வந்தது. ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வெல்லும்போது சூட்டப்படும் கௌரவம் மிக்க ஒலிவ் இலை வளையங்களை, நாடு திரும்பும்போது தங்களுடன் எடுத்துவரக்கூடாது என நியூஸிலாந்து அரசு திடீர் தடை விதித்தது.

ஒலிவ் இலைகள் மூலம் தொற்று நோய்க்கிருமி அல்லது நுண்ணுயிரிகள் பரவும் வாய்ப்பு இருப்பதால் அவற்றை அனுமதிக்கக்கூடாது என, நியூஸிலாந்து நாட்டு விவசாயத்துறை அமைச்சகத்தின் சிபார்சை அடுத்து, அந்த நாட்டு அரசு இந்த முடிவுக்கு வந்தது.

ஒலிவ் இலைகள் மூலம் நோய்க்கிருமிகள் பரவினால் - விலங்குகள், தாவரங்களை அவை பாதித்துவிடும். ஆகவே அவற்றை ஏதென்சிலேயே விட்டுவரவேண்டும் என்று உத்தரவிட்டது.

நியூஸிலாந்து அரசின் இந்தத் திடீர் முடிவால் அந்த நாட்டு பதக்க வீரர்கள் பெரிதும் கவலையடைந்தனர். அரும்பாடுபட்டு பெற்ற ஒலிவ் இலைகளை எப்படி சும்மா விட முடியும். தங்கள் அதிருப்தியை அவர்கள் அரசுக்குத் தெரியப்படுத்தினர்.

இதையடுத்து அவசர ஆலோசனை நடத்திய நியூஸிலாந்து அரசு, ஒலிவ் இலைகளுக்கு விதிக்கப்பட்ட தடையை விலக்கிக்கொண்டது.

# திறமையை நிரூபிக்க ஒரு வாய்ப்பு கிடைக்கும்

## பிரேசில் மரதன் வீரர் தெரிவிப்பு

மாரத்தான் பிரிவில் வெண்கலம் வென்ற பிரேசில் வீரர் வோன்டர்லே டி லிமாவுக்கு பிரேசில் மக்கள் அமோக வரவேற்பு அளித்து கௌரவித்தனர். ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் கடைசிப் போட்டியான மாரத்தான் போட்டி (43 கி.மீ) கடந்த ஞாயிறன்று நடந்தது.



இந்தப் போட்டியில் முந்திச் செல்ல யாருமின்றி முன்னேறிக் கொண்டிருந்தார் பிரேசில் வீரர் வோன் டர்லே டி லிமா. அப்போது முன்னாள் பாதிரியார் ஒருவர் இவரை வழி மறித்து தாக்கத் தொடங்கினார்.

இந்தத் தாக்குதலில் இருந்து விடுபட்டு இவர் ஓட முயற்சிக்கும் போது, இத்தாலியைச் சேர்ந்த ஸ்டெபானோ பால்டினியும், அமெரிக்காவின் மெப் கெப்லசியும் முந்திச் சென்று விட்டனர்.

இவர்கள் முறையே தங்கத்தையும், வெள்ளியையும் தட்டிச்செல்ல லிமாவுக்கு வெண்கலமே கிடைத்தது.

இந்த நிலையில் ஏதென்சிலிருந்து நேற்றுமுன்தினம் பிரேசில் திரும்பினார் லிமா. இவருக்கு சாபாலோ விமானநிலையத்தில் ரசிகர்கள் அமோகமான வரவேற்பு அளித்தனர். திரும்பிய பக்கமெல்லாம் நீங்கள் வென்றது வெண்கலம் அல்ல, தங்கம்தான் என்று சப்தம் போட்டுக் கூறிக்கொண்டிருந்தனர்.

மக்களின் அன்பு மழையில் நனைந்த லிமா, பின்னர் அளித்த பேட்டியில் கிரேக்க கடவுளும், ஒலிம்பிக் கடவுளும் என் பக்கம் இருந்தனர். அதனால் எனது பதக்க வாய்ப்புப் பறிக்கப்படவில்லை. எனது திறமையை மீண்டும் நிரூபிக்க ஒரு வாய்ப்பு அமையும் என்று அமைதியாகக் கூறி முடித்தார்.

# இங்கிலாந்து வீரர் சோலங்கி ராஜஸ்தானில் பிறந்தவர்!



(லண்டன்)

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் ஆரம்ப ஆட்டக்காரர் விக்ரம் சோலங்கி தற்போது இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் ஒருநாள் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் இவரது ஆட்டம் சிறப்பாக இருந்தது.

சோலங்கி இந்தியாவில் பிறந்தவர். அவரது சொந்த ஊர் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள உதய்பூர். முதல் ஒருநாள் போட்டியிலேயே இவர் அரைச்சதத்தை எடுத்து ரசிகர்கள் மத்தியில் இடம்பிடித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், இந்திய ரசிகர்கள் ஆதரவு அளிப்பது அவர்களது விருப்பம். என்னைப் பொறுத்தவரையில் இங்கிலாந்து அணிக்கு வெற்றியைப் பெற்றுத்தரவேண்டும் என்ற எண்ணத்திலேயே ஆடுவேன் எனக் கூறியுள்ளார்.

## தென்மராட்சி கல்வி வலய

# பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள்

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்விய வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

12, 14, 16 18 வயதுப் பிரிவுகளாக இந்தச் சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்கள் பற்றிய விபரங்கள் வருமாறு -

12 வயதுக்குட்பட்ட பிரிவில் - பிற்பகல் 1.30 மணிக்கு வரணி மகா வித்தியாலய அணியை எதிர்த்து கச்சாய் அ.த.க அணி மோதும் போட்டியும்,

பிற்பகல் 2 மணிக்கு கொடிகாமம் அ.த.க அணியை எதிர்த்து மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய அணி மோதும் போட்டியும், கொடிகாமம் அ.த.க பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

இதே பிரிவில் பிற்பகல் 1.30 மணிக்கு டிறிபேக் கல்லூரி அணியை எதிர்த்து நாவற்குழி மகா வித்தியாலய அணியும், பிற்பகல் 2 மணிக்கு கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலய அணியை எதிர்த்து மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய அணியும் மோதும் போட்டிகள் - மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

14 வயதுப் பிரிவில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தை எதிர்த்து வரணி மகா வித்தியாலயமும், பிற்பகல் 3.15 மணிக்கு வீரசிங்கம் மகா வித்தியாலயத்தை எதிர்த்து கச்சாய் அ.த.க பாடசா லையும் மோதும் போட்டிகள் - கொடி காமம் அ.த.க மைதானத்தில் நடை பெறவுள்ளன.

இதேபிரிவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் -

செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நாவற்குழி மகா வித்தியாலயத்தை எதிர்த்து, கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயமும், பிற்பகல் 3.15 மணிக்கு மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தை எதிர்த்து சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மோதும் போட்டியும் இடம்பெறவுள்ளது.

## உதைபந்தாட்டப் போட்டி

வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்தும் 9 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் மூன்றாம், நான்காம், ஐந்தாம் நாள் போட்டிகள் - உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த 30, 31 ஆம் திகதிகளில் நடைபெற்றன.

3 ஆம் நாள் போட்டியில், சென். அன்ரனீஸ் அணியை எதிர்த்து மோதிய கலைமகள் அணி 1:0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது. (21)

# வலைப்பந்தாட்ட சங்கத்தின் கலந்துரையாடல் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தின் வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் - இன்று பி.ப. 4.30 மணிக்கு யாழ். பொது மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ் மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களின் தலைவர் அல்லது செயலாளரைக் கலந்துகொள்ளுமாறு, யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் கேட்டுள்ளது.

அத்துடன், யாழ்.வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட மத்தியஸ்தர்களையும் இந்தக் கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# மூளைக்கு வேலை

1. குமாரிடம் ஏழு பொம்மைகள் உள்ளன.

வரிசைக்கு மூன்று பொம்மைகள் வருமாறு ஆறு வரிசைகளில் அந்த பொம்மைகளை அடுக்கினார் குமார் அது எப்படி?


## எனது செல்லப்பிராணி கிளி



1. கிளி ஒரு பறவை.
2. கிளி பச்சை நிறம்.
3. கிளி பழம் தின்னும்.
4. கிளியின் சொண்டு சிவப்பு.
5. கிளி கீ, கீ என்று கத்தும்.
6. கிளியை வீட்டில் வளர்ப்போம்.

கு. பிரியங்கா,
தரம் - 4
சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை

## சிங்கராஜா



நான் ஒரு சிங்கராஜா. காட்டில் வாழும் மிருகங்கள் அனைத்துக்கும் நானே தலைவன். எல்லோரும் என்னை சிங்கராஜா என்று அழைப்பார்கள்.

எனது காட்டிலுள்ள குடிமக்களிடையே நடக்கும் பிரச்சினைகளை நானே தீர்த்து வைப்பேன். என்னைக் கண்டவுடன் எல்லோரும் எழுந்து மரியாதை செய்வார்கள். அடர்ந்த காட்டில் எனது அரசாங்கம் சிறப்பாக நடைபெறுகின்றது.

ச.றிவேதிதா,
தரம் - 5
யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் மகாவித்தியாலயம்.

## ஓவியப்போட்டி முடிவுத் திகதி 10.09.2004

## ஓவியப்போட்டி

சிறுவர்களே உங்கள் ஓவியங்களுக்குப் பரிசுதர எண்ணியுள்ளோம். உங்கள் கைவண்ணங்களை இன்னும் மெருகூட்டுவதற்கு அனுப்புங்கள். இந்த ஓவியப்போட்டியில் பல விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதாவது, ஆண்டு 1-11 வரையான மாணவர்கள் இதில் பங்குபற்றலாம்.

நீங்கள் வரையும் ஓவியத்தில் நீர்வர்ணம், எண்ணெய் வர்ணம், கலர் பென்சில் போன்றன பயன்படுத்தலாம்.

வெள்ளைத்தாளில் ஓவியத்தினை வரைந்து அனுப்பவும். அனுப்பும் ஓவியத்தின் தாளினை மடிக்காமல் அனுப்பவும். தட்டச்சுத்தாளின் (A4) இல் அமையவேண்டும். நீங்கள் வரைந்த ஓவியத்தினை கீழ்வரும் கூப்பனைப் பூர்த்திசெய்து, அதனுடன் இணைத்து அனுப்பிவையுங்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்கள் 3 இற்குப் பரிசுகள் வழங்கப்படும். அத்தோடு, 10 ஆறுதல் பரிசுகளும் உண்டு. நீங்கள் அனுப்பும் ஓவியங்கள் பரிசுக்குரிய ஓவியங்கள் - இனந்தெரிவுகள் ஆர்.கு நடாத்தப்படும் கண்காட்சியில் பார்வைக்காக வைக்கப்படும்.

முழுப் பெயர் : ........................
கற்கும் பாடசாலை : ........................
கற்கும் தரம் : ........................
வீட்டு முகவரி : ........................


அதிபர்/ஆசிரியர் ஒப்பம் ........ திகதி ........ மாணவர் ஒப்பம் ........

ஓவியப்போட்டி
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## சித்திரக் கதை

### நட்பின் சிறப்பு

எவ்வளவுதான் பொன்னும், பொருளும் கிடைத்தாலும், அதனைப் பங்கிட்டுக்கொடுக்கும் தன்மை நண்பருக்கு மட்டும் தான் உண்டு. அது தான் நட்பின் சிறப்பு




தொடரும்...

கதை ஓவியம் ந. யகுன்







**சிந்தனைக்கு!**
அச்சம் எப்போதும் அறியாமையிலிருந்தே எழுகிறது.


# சிறுவர் அரங்கம்

# ஜிம்மி

(சென்றவாரத் தொடர்ச்சி...)

அந்த வேளையிலே மீண்டும் கறுப்பனின் குரல் மியாவ் என்று ஒலித்தது.

உர்ர்ர்... என்று ஆத்திரதோடு உறுமிக் கொண்டே, சத்தம் வந்த திசையில் திரும்பிப் பார்த்தேன். அங்கே பொல்லாத அந்தக் கறுப்பனைக் காணவில்லை மாறாகக் குளக்கரையில் நின்றிருந்த செடி ஒன்றின் பரந்த இலையின் மேல் சிரித்துக் கொண்டு அமர்ந்திருந்த பச்சைத் தவளையார் ஒருவரைக் கண்டேன். பச்சைத் தவளையாரைப் பார்த்து, பச்சைத் தவளையாரே! பச்சைத் தவளையாரே மியாவ் என்று கத்தியது நீர்தானா? என்று ஆவலோடு கேட்டேன்.



பச்சைத் தவளையார் என்னைக் கோபத்தோடு முறைத்துப் பார்த்தார்.

பின்னர் குட்டி நாயாரே! குட்டி நாயாரே கரக் கரக் கரக் என்று நான் பாடும் பாடலை எப்போதுமே நீர் கேட்டதில்லையா? கடவுள் அப்படியானதொரு இனிமையான குரலை எனக்குத் தந்திருக்க, மியாவ் என்று நான் கத்த வேண்டியதன் அவசியமும் என்னவோ என்று ஆவேசமாகக் கேட்டார்.

பச்சைத் தவளையாரே! பச்சைத் தவளையாரே தயவு செய்து என்னை மன்னித்து விடும். உமது குரலின் இனிமையை அறியாது, உம்மிடம் தவறாகப் பேசிவிட்டேன் என்று கவலையோடு சொன்னேன்.

எனது கவலை கண்டு கோபம் தணிந்த பச்சைத் தவளையார் அமைதியாகப் பேசினார். அவர் சொல்லியது போலவே அவரது குரல் எனக்கு இப்போது இனிமையாகத்தானிருந்தது.

நாய்க்குட்டித் தம்பி இவ்வளவு நேரமாக கறுப்பன் பூனையன் ஒருவன் - குளக்கரையிலே பதுங்கியிருந்தான். குளத்தில் வாழ்ந்திடும் எனது மீன் நண்பர்களை வேட்டை ஆடும் கெட்ட நோக்கத்தோடுதான் அவன் இங்கு வந்திருக்கவேண்டும்.

குளத்திலிருந்து நீ வெளியே வருவதைக் கண்டதுமே அவன் பாய்ந்தோடி விட்டான்.

பச்சைத் தவளையார் சொன்னதைக் கேட்டதும் கறுப்பன் மேலிருந்த எனது கோபம் பல மடங்காக அதிகரித்தது.



எனக்குத் தொல்லை தருவது மட்டுமல்லாது, கண்டெலியாரின் அருமைக் குட்டிகளை வேட்டையாடவும், குளத்தில் வாழ்ந்து வரும் அழகான மீன்களை இரையாக்கவும் அந்தப் படுபாவி துணிந்து விட்டானே என்று கவலையோடு நினைத்தேன்.

பச்சைத் தவளையாரிடம் நான் போய் வருகிறேன். இன்றைக்குக் கட்டாயம் அந்தக் கறுப்பனுக்கு ஒரு முடிவு கட்டிடவேண்டும் என்று தவளையாரிடம் சொல்லிவிட்டு, வீட்டுக்கு விரைந்து ஓடினேன்.

மூச்சிரைக்க ஓடி வீட்டை வந்தடைந்தேன். முற்றத்திலே சிவப்புக் கொண்டைச் சேவல் அண்ணன் நின்றிருந்தார். என்னைப் பார்த்த சேவல் அண்ணன் - ஓடோடி என்னருகே வந்தார்.

ஜிம்மி! ஜிம்மி கறுப்பன் இப்போது எங்கிருக்கிறான் என்பது எனக்குத் தெரியும். என்னுடன் கூட வா என்று என்னை அழைத்துச் சென்று, பக்கத்து வீட்டினில் வாழ்ந்து வரும் நாயண்ணனின் குட்டி மரவீட்டைச் சுட்டிக்காட்டினார்.

பக்கத்து வீட்டு நாயண்ணனின் குட்டி மரவீட்டுக் கூரையிலே, பாதிக் கண்கள் மூடிச் சுகமாகத் தூங்கியிருந்தான் பொல்லாத குறும்பனான கறுப்பன். பார் - ஜிம்மி பார். எவ்வளவு ஆனந்தமாக அவன் நித்திரை செய்கிறான் என்று - கோபத்தோடு என்னிடம் சொன்னார் சிவப்புக் கொண்டைச் சேவல் அண்ணன்.

சேவல் அண்ணா இதோ நான் போய் அவனைப் பிடித்து இழுத்து



வருகிறேன் என்று கோபத்தோடு சொல்லிவிட்டு, நாயண்ணனின் குட்டி மரவீட்டினை நோக்கி ஓடிச்சென்றேன்.

இவ்வளவு நேரமாகப் பாதிக் கண்கள் மூடித் தூங்கியிருந்த தந்திரக்காரக் கறுப்பன் - தன்னைப் பிடிப்பதற்காக நான் பாய்ந்தோடி வருவதைக் கண்டுவிட்டான்.

மறுகணமே நானோ அல்லது சேவல் அண்ணனோ எதிர்பார்த்திராதவொரு சம்பவம் நடந்தேறியது.

உடலைச் சிலிர்த்துக்கொண்டு, கூரையின் மேல் நின்ற கறுப்பன் நாயண்ணா, என்னருமை நாயண்ணா என்னைக் கொல்ல வரும் பாதகன் ஜிம்மியிடமிருந்து தயவுசெய்து என்னைக் காப்பாற்றுங்கள் என்று அலறுகின்ற கத்தினான்.

முதலில் உர்ர்ர்... என்று உறுமிய பின்னர் வள்வள்ளென்று கோபத்தோடு கத்திக்கொண்டே மரவீட்டிலிருந்து வெளியே வந்தார் நாயண்ணன்.



நாயண்ணனின் கோபம் நிறைந்த முகத்தைப் பார்த்ததுமே எனது குட்டி உடலோ வெட வெட என நடுங்கியது. என்னருகே நின்றிருந்த சேவல் அண்ணனோ என்னைவிடப் பலமடங்கு அதிகமாகப் பயங்கொண்டார்.

நாயண்ணனின் கத்திபோன்ற கூரிய பற்கள் கண்டு பயம் கொள்ளாதவர்கள் எவருமே இந்த உலகத்திலிருக்கமுடியாது. என்னருகே வந்த நாயண்ணன் - கோபத்தோடு என்னைப் பார்த்தார்.

- தொடரும் -

போ.சத்யன்

# மூளைக்கு வேலை விடைகள்

1. தாத்தா, அப்பா, பேரன் என்ற மூன்று பேர் இருக்கிறார்கள். இரு தந்தையார், இது மகன்கள் இனிப் பிரிக்கலாம்.

2. யானைப் பொம்மையின் விலை ரூபா ரூபா 40 + 20 = 60.

3. 8 - மேலே உள்ள எண்ணின் அடுக்குத் தொகையே கீழே உள்ள எண்

4. 360 - முதல் எண் 2 ஆலும் இரண்டாம் எண் 3 ஆலும், பின்னர் 4,5 பெருக்கிக் காண்க.

5. 5 - எல்லாப் பக்கத்திலும் கூட்டினாலும் கூட்டுத்தொகை சமமாகவுள்ளது.

# கேள்வி விடைகள்

தமிழ்மொழி

1. தமிழ் என்ற சொல்லிற்கு பொருள் யாது? - இனிமை
2. தமிழில் இரட்டைகாவியங்கள் எனப்படுபவை எவை? சிலப்பதிகாரம், மணிமேகலை
3. சீவக சிந்தாமணி என்ற நூலை எழுதியவர் யார்? - திருத்தக்கதேவர்
4. தமிழில் முதல் வந்த அகராதி எது? - சதுரகராதி
5. முத்தமிழ்களும் எவை? - இயல், இசை, நாடகம்
6. இலங்கையில் முதல் வெளிவந்த தமிழ்ப் பத்திரிகை எது? - உதயதாரகை

ம.மயூரி
தரம் - 10
பணட்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

# தையற் சிட்டு

தையற் சிட்டின் அறிவியல் பெயர் ஒதோடோமஸ் சுடோரியஸ். சிட்டுக்களில் மிகவும் பிரபலமானது இது. செடிகள் உள்ள தோட்டங்களில் தனித்தோ, ஜோடியாகவோ திரியும். புச்சிகள், புழுக்கள், முட்டைகள், பூந்தாதுக்கள், தானியங்களை உண்ணும். தேன் எடுப்பது விருப்பமான பொழுதுபோக்கு.


மற்றைய பறவைகளைப் போல இது மனிதர்களைக் கண்டால் பயப்படாது. ஆண்சிட்டு மட்டும்தான் கூடுகட்டும். அதைப் பெண் சிட்டுக்கள் வேடிக்கை பார்க்கும்.

தாவர நார்களை முறுக்கி, நுனியில் முடிச்சிட்டு, அழகாக இலையைத் தைக்கும். இலைநாரை வைத்து இரண்டு மூன்று இலைகளை இணைத்துத் தைக்கும். பின்னர் தைத்த இலைகளுள் பஞ்சு, நார் போன்றவற்றைப் போடும். தரையிலிருந்து 2 முதல் 3 அடி உயரத்திலேயே கூடு கட்டும். அகன்ற இலைகள் உள்ள செடிகளில், பசுமையான இலைகளை இணைத்தே கூட்டை உருவாக்கும்.

இலைகளை அழகாகத் தைப்பதனால்தான், இவற்றுக்குத் தையற்சிட்டு என்று பொருத்தமான பெயர் வைத்திருக்கிறார்கள். ஆங்கிலத்திலும் Tailor bird என்றே அழைக்கப்படுகிறது.

பெண் பறவை ஒரு தடவையில் - 3 அல்லது 4 முட்டைகள் வரை இடும். முட்டைகள் சிவப்பு நிறத்தில் அல்லது வெள்ளை நிறத்தில் காணப்படும். அவற்றின்மேல் மண்ணிற வண்ணப் புள்ளிகள் காணப்படும்.

தையல் சிட்டில் 5 பிரிவுகள் உள்ளன.




# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

5இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்

## விண்ணப்பம்

முழுப் பெயர் :........................................
கற்கும் பாடசாலை :........................................
கற்கும் தரம் :........................................
வீட்டு முகவரி :........................................
பிறந்த திகதி :........................................
ஆர்வமுள்ள துறைகள் :........................................
:........................................

................ ........................
திகதி ஒப்பம்

........................ ........................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

இங்கே மடிக்கவும்



# அன்புள்ள சிறுவர்களே!

நகைச்சுவை என்பது மனச்சந்தோஷம் தரும் சொற்களாகும். நகைச்சுவையால் எல்லோரும் சந்தோஷப்படுவார்கள். சிலர் இயல்பாகவே பிறரைத் தமது பேச்சின் மூலம் கவர்ந்து, மற்றவர்களைச் சிரிக்க வைக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.

நாம் உடல் நலமுடனும், மனவலிமையுடனும் வாழச் சிரிப்பு அவசியம். அது மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. வாய்விட்டுச் சிரித்தால், நோய்விட்டுப் போகும் என்று முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஆனால், இந்த நகைச்சுவை மூலம் ஏற்படுத்தப்படும் சிரிப்பானது - மற்றவர்களின் மனதைப் புண்படுத்துவதாக இருக்கக்கூடாது.

இன்னொருவரை மட்டந்தட்டுவதற்காகவோ, இழிவுபடுத்தும் நோக்கத்தோடு கூறப்படும் நகைச்சுவை மெச்சத்தக்கதல்ல.


எனவே, அனைவரும் சந்தோஷப்படும்படியான நகைச்சுவைகளைக் கூறிச் சிரியுங்கள். அந்தச் சிரிப்பில் சந்தோஷத்தைக் காணலாம்.

பாசமுடன் - சாரு அக்கா

# உங்கள் கைவண்ணம்



தரம் - 5
திருக்குடும்ப கன்னியர் மட மகா வித்தியாலயம்



ச.றெவினா
தரம் - 4
பெரியபுலம் மகாவித்தியாலயம்

# ஏதென்ஸ் ஒலிம்பிக்ஸ் - 2004

கிரிஸ் தலைநகர் ஏதென்ஸில் நடைபெற்ற 28 ஆவது ஒலிம்பிக் விளையாட்டுவிழா - கடந்தமாதம் ஓகஸ்ட் 13 ஆம் திகதி ஆரம்பமாகி, 29 ஆம் திகதி மிகவும் கோலாகலமாக நிறைவுற்றது.

இந்த விளையாட்டுவிழாவில், 202 நாடுகள் பங்குபற்றின. இதில், 10 ஆயிரத்துக்கும் அதிகமான வீர வீராங்கனைகள் பங்கேற்றனர். 75 நாடுகள் பதக்கப் பட்டியலில் இடம்பிடித்துள்ளன.

28 வகையான விளையாட்டுக்கள் - 38 மைதானங்களில் நடைபெற்றுள்ளது.

போட்டிகளில் வெற்றியீட்டுவோர்களுக்காக இந்த முறை 301 தங்கப்பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அடுத்த ஒலிம்பிக் போட்டிகள் 2008 ஆம் ஆண்டு சீனாவின் தலைநகரான பீஜிங்கில் நடைபெறவுள்ளது.

# அதிசயம் ஆனால் உண்மை

♣ தென் ஆபிரிக்கப் பாலைவனங்களில் 'பச்சிபோடியம்' என்னும் ஒருவகைச் செடியினம் காணப்படுகிறது. இந்தச் செடியின் தண்டு - எப்போதும் வடக்குத்திசைப் பக்கமே சாய்ந்து நிற்கும் தன்மையுடையது. இதனாலேயே இந்தச் செடிக்கு திசைகாட்டிச் செடி என்று பெயர். திசை தெரியாமல் பாலைவனங்களில் பயணம் மேற்கொள்ளும் பயணிகள்- இந்தச் செடியைப் பார்த்து, வடக்குத் திசையை அறிந்து கொள்கிறார்கள்.

♣ சூரியகாந்திப் பூ சூரியன் போகும் திசையில் விரிந்து இருக்கும். மாலையில் சூரியன் மறைந்ததும் வாடியதுபோல் காணப்படும். பின்னர் மீண்டும் காலையில் சூரியனைக் கண்டதும் விரிந்துவிடும். மழைகாலங்களில் மேகங்களால் சூரியன் மறைக்கப்பட்டிருக்கும் நேரங்களிலும், சூரியகாந்திப் பூ வாடியதுபோல் தென்படும்.

# மெழுகுவர்த்தி

காற்றின் அசைவு பெரிதாக இல்லாத இடத்தில் மெழுகுவர்த்தியை எரிய விட்டால், தீச்சுடர் அசையாமல் எரிந்து, ஒளிவிட்டுக் கொண்டிருக்கும். மெல்லிய காற்று வீசத்தொடங்கினால், தீச்சுடர் இலேசாக இப்படியும், அப்படியுமாக அலைபாயும். ஆனால், வேகமாக காற்று வீசினால், மெழுகுவர்த்தி அணைத்துவிடும். இது ஏன் என்று நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா?

முதலில் மெழுகுவர்த்தி எப்படி எரிகிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். தீக்குச்சியைப் பற்ற வைத்து மெழுகுவர்த்தி திரியின் மேல் காட்டும்போது, முதலில் அதன் அருகிலிருக்கும் மெழுகு உருகத் தொடங்குகிறது.



இவ்வாறு உருகும் மெழுகானது, திரியின் மேலேறி ஆவியாகிறது. இப்படி ஆவியாகிற மெழுகு தீப்பிடித்து தீச்சுடர் எரிகிறது. இந்தத் தீச்சுடர் தொடர்ந்து எரிய மெழுகிலுள்ள ஹைட்ரோகார் பன்துகள்கள் உதவுகின்றன. இந்தத் தீச்சுடரில் பலவிதமான வாயுக்களும் உள்ளன. அவை ஆவியான மெழுகு, எரிநீரியம் - எரிகின்ற மற்றும் எரியாத கரிமம், நீராவி கார்பனைட் ஒக்சைட் முதலியன.

**அடுத்ததாக, தீச்சுடர் தொடர்ந்து எவ்வாறு மெழுகு தீரும்வரை எரிகிறது என்று பார்ப்போம்.**

தீச்சுடரின் உயர் வெப்பநிலை - மெழுகைத் தொடர்ச்சியாக உருகச்செய்கிறது. இதனால், முழு மெழுகும் முடியும்வரை தீச்சுடர் தொடர்ந்து எரிகிறது.

**வேகமாகக் காற்று வீசினால், ஏன் மெழுகுவர்த்தி அணைந்து விடுகிறது எனப் பார்ப்போம்.**

இலேசாகக் காற்று வீசும்போது தீச்சுடரானது அசைந்து கொண்டிருக்கும். ஆனால், கடுமையாக காற்று வீசும்போது, காற்றானது தீச்சுடரைத் திரியிலிருந்து சற்று தொலைவுக்குத் தள்ளிவிடும். இவ்வாறு தள்ளும்போது அதனைச் சுற்றியுள்ள சூடான காற்றும், தீச்சுடருடன் சென்றுவிடும். சூடான காற்று இருந்த இடத்தில், குளிர்ந்த காற்று இடம்பிடித்து விடுகிறது. இதன் விளைவாகத் திரியின் அருகில் இருக்கும் வெப்பநிலையும், மெழுகின் எரிதல் வெப்பநிலையும் குறைகிறது. மேலும் மெழுகின் திரியருகே சிறியளவு வெப்பக்காற்று இருக்கும். இதனால், மெழுகை ஆவியாக்க முடியாது. தீச்சுடரும் சற்றுத்தள்ளி இடம் பெயர்ந்து விடுவதால், மற்ற வாயுக்களும் பக்கத்தில் இருக்கமாட்டாது. இதனால், மெழுகுவர்த்தி அணைந்துவிடுகின்றது.

# வீடமைப்புத் திட்டப் பணிகளை உலக வங்கி அதிகாரி பார்வை!

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் நிதியுதவியுடன் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வீட்டுத்திட்டத்தின் முதல் கட்டப்பணிகளை உலக வங்கிப் பிரதிநிதி பார்வையிட்டார்.

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த உலக வங்கியின் வீடமைப்புத்திட்ட பிரதம அதிகாரியான டொக்டர் எடான் நாராயணன் - கடந்த புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் ஆரம்பக்கட்ட வேலைகளைப் பார்வையிட்டார். இவர் யாழ். மாவட்டத்தில் முதல் கட்டமாக அமைக்கப்பட்ட நூறு வீடுகளையும் பார்வையிட்டார்.

பருத்தித்துறை, ஆழியவளை, தென்மராட்சி, யாழ். நகரப்பகுதி முதலான பகுதிகளில் அமைக்கப்பட்ட இந்த வீடுகளை அவர் இரு நாட்களும் சென்று பார்வையிட்டதுடன், அவற்றின் அமைப்பையும், திறனையும் பார்த்து அவர் திருப்தி தெரிவித்தார்.

தொடர்ந்து வீடுகள் அமைக்கப்படுவது குறித்தும், அதற்கான பணிகளை மேற்கொள்வது குறித்தும் நேற்று முன்தினம் மாலை 3.00 மணியளவில் யாழ். செயலகத்தில் அரச அதிபர் உட்பட முக்கிய அதிகாரிகளுடன் சந்திப்பொன்றை நடத்தினார்.

அவர் நேற்று கொழும்பு திரும்பினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கொக்குவில் நந்தாவில் குளத்தின் வாய்க்காலிலிருந்து துர்நாற்றம்

கொக்குவில் பகுதியிலுள்ள நந்தாவில் குளத்தின் வாய்க்காலில் மக்கள் குப்பைகளைக் கொட்டுவதனால் வாய்க்காலில் நீர் தேங்கி துர்நாற்றம் வீசுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குளம் 'நியாப்' திட்ட உதவியுடன் அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டு குளத்தின் வாய்க்கால்கள் ஆழமாக்கப்பட்டுத் துப்பரவு செய்யப்பட்டன.

இந்தப் பகுதி மக்கள் தமது கழிவுப் பொருட்களைப் போடவேண்டிய இடத்தில் போடாமல் வாய்க்கால்களுக்குள் போடுவதால் நீர் வழிந்தோட முடியாமல் தேங்கி துர்நாற்றம் வீசுகிறது.

இந்தச் செயற்பாடானது இந்தப் பிரதேச மக்களின் ஒத்துழைப்பற்ற தன்மையையே எடுத்துக்காட்டுவதாக நல்லூர் பிரதேச செயலர் பொ.வைரமுத்து கவலை தெரிவித்தார்.

# லொத்தர் சபை சீட்டிழுப்பில் வடக்கில் 2 அதிர்ஷ்டசாலிகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய லொத்தர் சபையின் சீட்டிழுப்புகளில் கடந்த மாதம் மட்டும் வடபகுதியைச் சேர்ந்த இருவர் அதிஷ்டசாலிகளாகத் தெரிவாகி இருப்பதாக, வடபகுதியின் தேசிய லொத்தர் சபை முகவர் தெரிவித்தார்.

13.08.2004கில் இழுக்கப்பட்ட மகஜன லொத்தரில் 10 லட்சம் ரூபாவும் -

19.08.2004 இல் இழுக்கப்பட்ட ஜயோதா லொத்தரில் 50 ஆயிரம் ரூபாவும் வடபகுதிக்குக் கிடைத்திருப்பதாக அவர் கூறினார்.

இதில் 10 லட்சம் ரூபாவை இதுவரை எவரும் கோரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. இல: 816

905 என்ற இலக்கததைக் கொண்ட மகஜன சீட்டை வைத்திருக்கும் அதிஷ்ட்சாலி உடனடியாக தொடர்பு கொள்ளும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

50 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொண்ட அதிர்ஷ்டசாலி கொழும்பிலேயே பரிசைப் பெற்றுக்கொண்டு திரும்பியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. (206)

# சந்திகளில் இளைஞர்கள் கூடுவதற்கு கலாசாரம் பேணும் குழுவினர் தடை!

வடமராட்சி - பருத்தித்துறை பகுதியில் இரண்டாம், மூன்றாம், நான்காம் குறுக்குத்தெருச் சந்திகள் மற்றும் தும்பளை வீதியிலுள்ள தெருமூடிமடம், புளியடி போன்ற இடங் களில் இளைஞர்கள் கூடியிருப்பதற்கு கலாசாரம் பேணும் குழுவினர் தடைவிதித்துள்ளனர். மீறுவோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்துள்ளனர்.

இந்த இடங்களில் இரவு பகலாகக் கூடும் இளைஞர்கள் அந்தப் பகுதியால் பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவிகளிடமும், யுவதிகளிடமும் வேண்டாத வார்த்தைகள் பேசி சேஷ்டைகள் செய்துவந்தனர்.

இது தொடர்பாக பெற்றோர்கள் கலாசாரம் பேணும் குழுவிடம் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து கலாசாரம் பேணும் குழுவினர் குறிப்பிட்ட இடங்களில் இளைஞர்கள் கூடுவதற்குத்தடை விதித்தனர். (20)

# முதிய விவசாயிகளை கௌரவிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

விவசாய கால்நடை அமைச்சின் அனுசரணையுடன் எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம்திகதி விவசாயத் திணைக்களத்தில் முதிய விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு, கௌரவிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கமநல சேவைப் பிரிவிலிருந்தும் 5 விவசாய முதியோர் தெரிவு செய்யப்பட்டு அதிலிருந்து 5 பேர் மட்டும் யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படுவர்.

கமக்காரர் அமைப்பு பிரதிநிதியாகவும், 60 வயதுக்கும் மேற்பட்டவராகவும், விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து ஓய்வூதியம் பெறுபவராகவும், கால் ஏக்கர் அளவுக்கு மேல் விவசாயம் செய்பவராகவும், விவாசாய நடவடிக்கைகளை மேம்படுத்துபவராகவுமுள்ள தகுதிகளையுடையவர்கள் இந்த முதியோர் கௌரவிப்பு நிகழ்ச்சிக்கு தெரிவுசெய்யப்படுவர்.

இவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கொழும்பிலுள்ள விவசாய கால்நடை அமைச்சு அலுவலகத்தில் நடைபெறுமென விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (101)

# போரூட் அனுசரணையுடன் இலவச இசைப்பயிற்சி

புல்லாங்குழல், கிற்றார், ஓகன், மிருதங்கப் பயிற்சிநெறிகளைப் பயில்வதற்காக இலவச பயிற்சிநெறி ஒன்றை வலிகாமம் மேற்கு பிரதேசசபையினர் நடத்தவுள்ளனர்.

இந்தப் பயிற்சிநெறிக்கு போரூட் அனுசரணையுடன் யு.என்.எச்.சி.ஆர் நிதி உதவியளித்துப் பயிற்சியை வழங்கவுள்ளது. இதற்கெனத்தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளை இன்று முற்பகல் 10 மணிக்கு மேற்படி பிரதேச செயலகத்துக்குச் சமுகமளிக்கும்படி கலாசார உத்தியோகத்தர் கந்தசாமி றஜனி அறிவித்துள்ளார். (48)

# யாழ் - முகமாலை வீதி புனரமைப்புக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து முகமாலை வரையான கண்டி வீதியைப் புனரமைத்து அகலமாக்க நிதியுதவி வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது.

பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் பிரதானவீதி போக்குவரத்து நிறைந்த வீதியாக விளங்குவதாலும், யாழ்ப்பாணம் - முகமாலை வீதியும் போக்குவரத்து நிறைந்த பாதைகளாக இருப்பதால் வீதியை அகலமாக்கி ஒரே நேரத்தில் இருவாகனங்கள் செல்லக்கூடிய அகலமான பாதையாக விஸ்தரிக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17)

### ஆலயம் புனரமைப்பு

கல்லுண்டாய் பிளுளையார் ஆலயம் ஒரு லட்சத்து பத்தாயிரம் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டுள்'ளது. மீள் புனரமைப்பின் பின்னர் கடந்த 24ஆம் திகதி பிள்ளையார் ஆலயத்துக்கும் அங்குள்ள நரசிங்க வைரவர் கோவிலுக்கும் மகா கும்பாபிஷேகம் இடம் பெற்றதாகவும் ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (91)

# கற்கோவளம் முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி, வடக்கு கற்கோவளம் ஸ்ரீகும்பி முருகன் தேவஸ்தான வருடாந்த உற்சவம், எதிர்வரும் 07ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

15ஆம் திகதி புதன்கிழமை தேர்உற்சவமும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்த உற்சவமும் இடம்பெறும். ஆலய உற்சவ 10 நாட்களும் 6.30மணி தொடக்கம் 7.30மணி வரை 'பெரும் பெயர் முருகன பெருமையும் சைவ சமய விழுமியமும்' என்னும் தலைப்பில் சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜக் குருக்கள் தொடர் சொற்பொழிவாற்றவுள்ளார். (20)

# மூளாய் மீன் சந்தையில் பெரும் சுகாதாரச் சீர்கேடு

மூளாய்க் கிராமத்தில் காணப்படும் மீன் சந்தையில் மாரிகாலங்களில் சுகாதாரச் சீர்கேடு அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்தச் சந்தை தாழ்வானக் காணியில் அமைந்துள்ளமையால் மழைநீர் தேங்கி நிற்கின்றது. இதனால், மீன் வியாபாரிகளும், பொதுமக்களும் பெரும்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன், இந்தச் சந்தையில் போதிய கட்டட வசதிகள் காணப்படாமையால் மழை காலத்தில் வியாபாரம் செய்வதற்கு சுகாதாரமான இடம் காணப்படவில்லை. இதனால், வியாபாரிகள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (207)




வலி. வடக்கு பிரதேச சபையினரால் கொண்டாடப்பட்ட உள்ளூராட்சிவார கண்காட்சி நிகழ்வில் மல்லாகம் மகா வித்தியாலய அதிபர் ம.நாகேந்திர சீலன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (101)

# கட்டாக்காலிகள் அதிகரிப்பு நெற்செய்கை பாதிப்பு

பெரும்போக நெற்செய்கை காலங்களில் கட்டாக்காலிகளால் ஏற்படும் பயிர் அழிவு குறித்து வலிமேற்கு விவசாயிகள் மிகுந்த அச்சத்துடன் காணப்படுகின்றனர்.

கடந்த வருடத்தில் வலிமேற்குப் பிரதேச கிராமங்களாகிய தொல்புரம், சுழிபுரம், மூளாய், பொன்னாலை, நெல்லியான், பெரியபுலோ போன்ற கிராமங்களில் பல ஹெக்டயர் கணக்கான நெற்பயிர்கள் கட்டாக்காலிகளால் முற்றாக அழிக்கப்பட்டன.

இதனால் இந்த வருடமும் அந்த நிலை ஏற்படுமா? என்பது குறித்து இந்துப்பகுதி மக்கள் மிகுந்த கவலையளித்திருப்பதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், கமநல சேவைத் திணைக்களமும் இந்த விடயத்தில் உடனடியாகத் தலை யிட்டு இந்தப் பிரச்சினையைத் தீர்க்க உதவவேண்டும் எனவும் கேட்டுள்ளனர். (207)

### நாவற்குழியில் வீட்டுத்திட்டம்

நாவற்குழி ஐந்துவீட்டுத்திட்டப் பகுதியில் 8 லட்சம் ரூபா செலவில் வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்கான அடிக்கல்லை அடுத்தமாத நடுப்பகுதியில் அரச அதிபர் நாட்டிவைக்கவுள்ளார். (29)

### வைத்திய உத்தியோகத்தர் நியமனம்

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலை மனநோய் விடுதிக்கு தற்காலிகமாக வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நீண்டகாலமாக நிலவிய இந்தக் குறைபாட்டை பேராசிரியர் தயாசோமசுந்தரம் மேற்கொண்ட தீவிர விடாமுயற்சியின் பயனாக யாழ்ப்பாண்ம் போதனாவைத்தியசாலையில் பணிபுரிந்த வைத்திய அதிகாரி இடமாற்றம் பெற்றுவந்துள்ளார். (101)

### சொற்பொழிவு

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக் கிழமைகள் தோறும் இடம்பெற்று வரும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை "சிறப்புச் சொற்பொழிவு" என்னும் தலைப்பில் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகனின் சொற்பொழிவு இடம் பெறவுள்ளது. (20)

### அஞ்சல் சிற்றூழியர் பதவிக்கு 2500 விண்ணப்பங்கள்

யாழ். மாவட்ட அஞ்சல் சிற்றூழியர் பதவிக்கு இதுவரை யாழ். மாவட்டத்தில் சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகத் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சைகளுக்கான திகதிகள் இன்னமும் அறிவிக்கப்படவில்லை. (64)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நான்காவது அகவையில்



பெயர் : ச.விதுஷா
முகவரி : புளியங்குளம், ஒட்டுசுட்டான்.

நான்காவது அகவையில்



பெயர் : ஞ. தேமதுரன்
முகவரி : மீசாலை வடக்கு, கொடிகாமம்.

ஆறாவது அகவையில்



பெயர் : தி.பரதன்
முகவரி : மூளாய் மேற்கு, மூளாய்.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :------------------------
முகவரி :------------------------
பிறந்த ஆண்டு:------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
------------------------
பெற்றோர் ஒப்பம்

## திலீபன் மருத்துவமனை பூநகரியில் திறந்து வைப்பு

கிளிநொச்சி, பூநகரி பிரதேசத்தில் தியாக தீபம் திலீபன் மருத்துவமனையின் கிளைநிறுவனம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமையன்று முற்கொம்பன் பிரதேசத்திலேயே இந்த மருத்துவமனையின் கிளைநிறுவனம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களது அடிப்படை வைத்திய தேவைகளை வழங்கும் முகமாக, தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையாளரால் இந்தப் புதிய கிளை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

## வீடுகளை இழந்தோருக்கு நிகொட் நிறுவன உதவியுடன் வீட்டுத்திட்டம்

மன்னார் மாவட்டத்தில் கடந்த காலயுத்தம் காரணமாக வீடுகளை இழந்த வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு நிகொட் நிறுவனம் 5942 வீடுகளை அமைத்துக் கொடுக்கவுள்ளது.

இந்தவீடுகள் மன்னார் மாவட்டத்தின் மூன்று பிரதேச செயலர் பிரிவுகளிலும் இரண்டு உதவி அரச அதிபர் பிரிவுகளிலும், மூன்று கிராம அலுவலர்கள் பிரிவுகளிலும் அமைக்கப்படவுள்ளன.

## வரட்சியினால் பாதிக்கப்பட்டவர்களின் விபரங்கள் திரட்டல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்பொழுது நிலவும் கடும் வரட்சியினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றது.

இந்த விபரங்கள் முல்லைத்தீவு அரச செயலகத்தால் திரட்டப்படுகின்றன. வரட்சி நிவாரணங்களை வழங்குவதற்காகவே இந்த விபரங்கள் திரட்டப்படுவதாக தெரிய வருகின்றது.

## கிணற்றில் குப்பை கொட்டியோர் அடையாளம் காணப்பட்டனர்

(மன்னார்)

மன்னார் பிரதேசத்தில் குடிநீர் கிணற்றினுள் குப்பை கூழங்களை கொட்டிய குழுவினர் இனம் காணப்பட்டுள்ளனர்.

அண்மையில் மன்னார் கூடல் பிரதேசத்தில் குடிநீர் கிணற்றினுள் குப்பை கூழங்களை கொட்டிய குழுவினரை, கிராம நலன் விரும்பிகள் இனம் கண்டு, அவர்களைக்கொண்டே அக்குடிநீர் கிணற்றினை துப்பரவு செய்தனர்.

# வன்னியில் பொலித்தீன் பாவனை முதலாம் திகதிமுதல் தடைவிதிப்பு

(கிளிநொச்சி)

வன்னி மாவட்டத்தில் இந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் பொலித்தீன் பாவனைக்கு முற்றாக தடைவிதிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் வட்டக்கச்சி விவசாய மாதிரிப்பண்ணையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட விவசாயப் பொருட்காட்சியின் ஆரம்ப வைபவத்தில் தலைமைவகித்து உரையாற்றுகையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

இன்றைய பொருட்காட்சியில் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடைசெய்யப்பட்டிருக்கிறது. பொலித்தீன் பைகள் பாவனைக்குப் பதிலாக உள்ளூர் மூலப் பொருட்களைக்கொண்டு பைகள் தயாரிக்கும் முயற்சிக்கு தொழில் திணைக்களம் பயிற்சிகளை வழங்குவதுடன் நிதியுதவியும் வழங்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். (21)

# மன்னார் அடம்பன் பகுதிக்கு புதிதாக பேருந்து சேவை

மன்னார் அடம்பன் பகுதியில் புதிதாக தமிழீழப் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துச் சேவை ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் உயிலங்குளம் சோதனைச் சாவடியில் இருந்து, அடம்பன் பிரதேசம்வரை தமிழீழப் போக்குவரத்துக் கழகத்தின் இந்தப் புதிய பேருந்துச்சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்ற இந்த நிகழ்வில், இந்தப் பிரதேசத்துக்கான முதலாவது சேவையை அடம்பன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சந்தியாகு ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர், ஆசிரியர்கள், பொது மக்கள், போராளிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

போக்குவரத்துச் சிரமங்களை எதிர்நோக்கிய பாடசாலை மாணவர்களுக்கு இந்தப் புதிய பேருந்துச் சேவைகள் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (201)

# பூநகரி பிரதேசத்தில் குடிநீருக்கு தட்டுப்பாடு

கிளிநொச்சி மாவட்டம், பூநகரிப் பிரதேசத்தில் குடிநீருக்கு பலத்த தட்டுப்பாடு நிலவிவருகிறது.

இந்த பிரதேசத்திலுள்ள கௌதாரிமுனை, சாமிப்புலம், பரமக்கிராய், ஞானியர்மடம், கறுக்காய்தீவு, செட்டியாய்கறிச்சி, தம்பிராய், நல்லூர், ஆலங்கேணி ஆகிய பகுதிகளில் குடிநீருக்கு பலத்த தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நீர் விநியோக வடிகாலமைப்புச் சபை, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன், பாரிய நிதிச் செலவில் நகர நீர் விநியோகத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தி வரும் இதேவேளை, குடிநீருக்குப்பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இதனால் இந்தப் பிரதேசங்களில் வாழும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# வவுனியா ரெலோ அலுவலகத்தை உரியவரிடம் ஒப்படைக்க உத்தரவு

வவுனியாவில் ரெலோ அலுவலகமாகப் பயன்படுத்தப்படும் வீடு 2006ஆம் ஆண்டில் மீளவும் அதன் சொந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வீட்டில் இருந்து ரெலோ அமைப்பினர் வெளியேறவேண்டும் எனக் கோரி அதன் உரிமையாளர் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

அத்துடன், இதுவரை காலமும் அதில் தங்கியிருந்தமைக்காக வாடகை செலுத்த வேண்டுமெனவும் குறிப்பிட்ட உரிமையாளர் கோரியிருந்தார்.

இந்த நிலையில் இருதரப்பினருக்கும் இடையில் சமரசம் ஏற்பட்டுள்ளதாகவும், அதன் அடிப்படையில் 2006ஆம் ஆண்டில் இந்த வீடு உரிமையாளரிடம் ஒப்படைக்கப்படவேண்டும் எனவும் இணக்கங்காணப்பட்டது.

## தலைமன்னார் கடற்பரப்பில் இந்திய கடற்படை ரோந்துப்பணி

தலைமன்னார் வடக்கு பகுதிக்கும் கச்சதீவு பகுதிக்கும் இடையில், இந்திய கரையோர காவற்படையினரின் இரு படகுகள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

இந்த கடற்பரப்பில் பாதுகாப்பு அற்றமுறையில் அகதிகள் பயணிப்பதையும், போதைப்பொருள், மோட்டார் சைக்கிள், மருந்துப பொருட்கள் போன்றவை கடத்தப்படுவதையும் தடுக்கும் முகமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## அகற்றப்படாத மரம்

வட்டக்கச்சி சில்வாவீதி இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை வளவினுள் இருந்த வேப்பமரம் வெட்டி வீழ்த்தப்பட்டு வீதியில் உள்ளது.

இந்த மரம் வீழ்த்தப்பட்டு இரு மாதங்களாகியும் மரம் அகற்றப்படாமல் உள்ளது. இதனால், இரவு நேரங்களில் இந்த வீதியால் செல்வோர் மரத்துடன் மோதி வீழ்கின்றனர். (9)

## பூனைத்தொடுவாய் வேளாங்கன்னி ஆலய திருநாள்

பூனைத்தொடுவாய் புனித வேளாங்கன்னி ஆரோக்கியமாதா திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நாளாந்தம் திருச்செபமாலை ஆராதனைகளும் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை திருப்பலியும் அதனைத் தொடர்ந்து நற்கருணைச் சுற்றுப் பிரகாரமும் நடைபெறவிருக்கிறது. மறுநாள் காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சுருப பவனியும் நடைபெறவிருக்கிறது.

திருவிழாவுக்கான ஆயத்த ஒழுங்குகளை தாளையடி பங்குத்தந்தை அருட்திரு யே. பிரான்சீஸ் அடிகள், உதவிப் பங்குத்தந்தை அருட்திரு. எம். கான்ஸ்போமர் அடிகள் ஆலயத்திருப்பணிச் சபையினர் ஆகியோர் செய்து வருகின்றனர். (21)




# வெடிபொருள் அறிவிப்புப் பலகைகளை திருடுவதை தடுக்குமாறு கோரிக்கை!

வன்னிப் பகுதியில் கண்ணிவெடி, வெடிபொருட்களின் ஆபத்துக்கள் தொடர்பாக ஏற்படுத்தப்பட்டுள்ள விழிப்பு அறிவிப்புப் பலகைகளைத் திருடுவதைத்தடுக்க பொது அமைப்புக்கள், நலன் விரும்பிகள் ஒன்றிணைந்து ஒத்துழைக்க முன்வரவேண்டும்.

இவ்வாறு வன்னியிலுள்ள வெண்புறா நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யுத்த அனர்த்தங்களினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள வன்னிப் பிரதேச மக்களையும், வன்னியூடாக வடக்கு - தெற்கு நோக்கிப் பயணிக்கும் ஏனைய பகுதி மக்களையும் கண்ணிவெடி ஆபத்துக்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, முக்கிய வன்னியை ஊடறுத்துச் செல்லும் ஏ- 9 நெடுஞ்சாலையிலும் மற்றும் பாதிப்புக்குள்ளான பகுதிகளிலுள்ள வீதிகளிலும் கண்ணிவெடி, வெடிபொருட்கள் ஆபத்துக்கள் சம்பந்தமான அறிவிப்புப் பலகைகளை நிறுவியுள்ளது.

இந்த மனிதநேயப் பணிகள் பெரும் சிரமங்களுக்கு மத் தியில் எமக்குக் கிடைக்கப்பெற்ற நிதியுதவிகளுடன் எமது மூலவளங்கள், மனிதவளம் ஆகியவற்றின் இணைந்த செயற்பாட்டினாலேயே நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகளின் உன்னதமான பிரயோசனங்களை பகுத்துணர முடியாத சில தீய நலவாதிகள் தங்களின் சொந்தத் தேவைகளுக்காக இந்த அறிவிப்புப் பலகைகளைத் திருடிச் செல்கின்றனர்.

நான்கு அடிச்சதுரமான தகரத் துண்டினதும், இரண்டு இரும்புக் குழாய்களினதும் பெறுமதியைவிட, அவற்றின் காரணமாக எத்தனையோ மனித உயிர்கள் காப்பாற்றப்படுகின்றன என்பதை உணரவேண்டும்.

எனவே, இவ்வாறான திருட்டு வேலைகளில் ஈடுபடுபவர்கள் இனிமேலாவது எமது மக்களின் பாதுகாப்புக்கருதி அறிவிப்புப் பலகைகளைத் திருடுவது போன்ற சமூக விரோதச் செயல்களைச் செய்யாது எச்சரிக்கைபெற வேண்டும் என்பதே இந்த அறிக்கையின் முக்கிய கோரிக்கை.

அநேகமாக இயக்கச்சி தொடக்கம் முகமாலை வரையிலான பகுதிகளிலேயே இந்தவிதமான நாச வேலைகள் இடம்பெறுவதை எம்மால் அவதானிக்க முடிகிறது.

இந்தப் பிரதேசங்களிலுள்ள பொது அமைப்புக்கள், நலன் விரும்பிகள் ஒன்றிணைந்து இந்த மோசமான செயல்களை நிறுத்துவதற்கு ஒத்துழைக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# வன்னி அபிவிருத்தி பணிகளுக்கு கிஷோர் எம்.பி. நிதியொதுக்கீடு


(கிளிநொச்சி)

மன்னார் மாவட்டத்துக்கு -வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் சிஷோர் தனது வருடாந்த நிதியில் இந்த ஆண்டு செய்யப்பட வேண்டிய வேலைத்திட்டங்களுக்குரிய ஒதுக்கீட்டு விபரத்தை வெளியிட்டுள்ளார்.

ஒரு இலட்சத்து 65 ஆயிரம் ரூபா மடு சந்தியில் குழாய்க் கிணறு தோண்ட ஒதுக்கப்பட்டுள்ளது.

முருங்கன் கற்கடந்தகுளம் கிறிஸ்தவ வித்தியாலயத்துக்கு பாண்ட் வாத்திய கருவி கொள்வனவு செய்வதற்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும்,

அதேபோல் சூரிய கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்துக்கு பாண்ட் வாத்தியம் கொள்வனவு செய்வதற்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.



அண்மையில் மாவீரன் பண்டார வன்னியனின் 201ஆவது ஆண்டு விழா கற்சிலைமடு பகுதியில் கொண்டாடப்பட்ட போது தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் பொதுச் சுடர் ஏற்றுவதையும், முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் தேசியக்கொடியை ஏற்றுவதையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரட்ணம் பண்டாரவன்னியன் சிலைக்கு மலர்மாலை அணிவிப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படம்: கனகரவி)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம் அதனை*
*மிகல்ஊக்கின் ஊக்குமாம் கேடு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## பொருண்மிய வளமே தமிழர்களின் பலம்

ஒரு தேசிய இனத்தின் வளர்ச்சி என்பது அந்த இனம் வாழும் தேசத்தின் அல்லது பிரதேசத்தின் அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார வளம் ஆகியவற்றின் பலத்திலேயே தங்கியுள்ளது என்றால் அது மிகையில்லை.

இலங்கையில் தமிழ்த் தேசிய இனமானது பெருந்தேசிய இனமான சிங்கள பேரினவாதிகளின் மேலாதிக்க அடக்கு முறைகளுக்குள் சிக்கி, அவர்களின் கலை, கலாசாரம், பண்பாடுபோன்ற இனதனித்துவ அடையாளங்கள், திட்டமிட்ட முறையில் அழிக்கப்பட்டு, அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டு அவர்களின் பாரம்பரிய வாழ்நிலப்பகுதிகள் - குறிப்பாக எல்லைப்பிரதேசங்கள் - திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் அபகரிக்கப்பட்டு சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில் படிப்படியாக ஆனால், வேகமாக தமது வாழ்வியல் சுதந்திரங்களை இழக்கும் நிலை தீவிரமடைந்த காலத்திலேயே விழிப்புக்கொண்டு அடக்கு முறையை அதன் சகல வடிவங்களிலும் எதிர்த்து முறியடிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதுடன் பேரினவாத சக்திகளுக்கெதிராக கிளர்ந்தெழுந்து போராட வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

வெறுமனே அரசியல் ரீதியாக தொடங்கிய தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை சிங்கள ஆட்சித் தலைமைகள் ஆயுத முனையில் - இராணுவரீதியில் - அடக்க முற்பட்டபோதுதான் மாற்று வழி ஏதும் தென்படாத நிலையில் தமிழ் மக்களும் தம்மை ஆயுத பாணிகளாக மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் தவிர்க்கமுடியாமல் ஏற்பட்டது.

கடந்த மூன்று தசாப்தகால ஆயுதப்போராட்டமானது தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையை முற்றாகவே சிதைக்கும் இலக்குடன் இயங்கிவந்த தென்பகுதி அரசியற் தலைமைகளின் இனவெறியைத் தீர்த்துக்கொள்ள வழி சமைத்தபோது தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடப் பிரதேசமான வடக்கு - கிழக்கின் பொருளாதார பலம் மற்றும் வளமே அவர்களின் பிரதான தாக்குதல் இலக்காயிற்று.

தமிழ் மக்களின் பொருளாதார பலத்தையும், பொருண்மிய வளத்தையும் நிர்மூலமாக்கினால் தமிழர் தம் விடுதலைப் போராட்டத்தையும் தோற்கடித்துவிடலாம் என்றே இலங்கையின் ஆட்சித் தலைமைகள் கணக்குப்போட்டன.

ஆனால், தங்களின் கணக்கு தப்புக்கணக்காகிவிடும் என ஒருபோதும் அவர்கள் எண்ணவேயில்லை. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த வலிய தலைமையானது - தொலைநோக்குடன் மேற்கொண்ட மாற்றுத் திட்டங்கள் அரசாங்கங்கள் வகுத்த திட்டங்களை எவ்வாறு முறியடித்தது என்பதற்கு வரலாறே ஆதாரம்.

தமிழ் மக்கள் மீது அரசு விதித்த பாரிய - நியாயமற்ற - கொடூர சிந்தனையுடன் கூடிய பொருளாதாரத்தடையானது எத்தகைய பாரிய வாழ்க்கைச் சுமையை அவர்கள் மீது ஏற்படுத்தியதென்பது தெரிந்தவிடயமே. ஒரு மனிதனின் மிக மிக அத்தியாவசியமான உணவு, பால்மா, மருந்து வகைகள், மருத்துவ சாதனங்கள் போன்றவற்றிற்கே கட்டுப்பாடுகளும், தடைகளும் விதித்த மனிதநேயமற்ற நடவடிக்கையை மேற்கொண்ட அரசு அதன் மூலம் பட்டினியாலும், நோயாலும் தமிழ் மக்களைத் துன்பப்படுத்தி ஒடுக்கலாம் என்ற மூலோபாயத்தைக் கையாண்டபோதும், தமிழ் மக்களின் மனஉறுதியும், கடின உழைப்பும் அத்துடன் அவர்களின் தாயக பூமியின் வளம் கொடுத்த ஒத்துழைப்பும் அரசின் திட்டத்தைத் தகர்க்க உதவியது.

இன்று போர் ஓய்ந்துள்ள நிலையில் - சமாதானம் தள்ளாடிக்கொண்டிக்கும் சூழலில் - சமாதானத்தின் பெறுபேறுகள் எதனையும் தமிழ் மக்கள் பெற்றுக்கொண்டு இயல்பு வாழ்க்கைக்கு திரும்பமுடியாத நெருக்கடிகள் தொடர்கையில்... தமிழ் மக்கள் தமது பொருண்மிய வளத்தைப் பெருக்கி, தம்மைத் தாமே எவரிலும் எதற்கும் தங்கி நிற்காத சுயபலத்தில் முன்னேற தயார்படுத்திக் கொள்ளவேண்டியவர்களாக உள்ளனர்.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயக பூமியானது நிலவளம், நீர்வளம், கடல்வளம் மற்றும் கனியவளம் யாவும் நிறைந்த செழிப்பான பிரதேசங்களைக் கொண்டது.

தமிழன் நெற்றிவியர்வை நிலத்தில் சிந்தி உழைக்கச் சளைக்காத இனத்தவன் எனவே அடக்கு முறைகளுக்கும், பொருளாதாரத் தடைகளுக்கும் அவன் பயந்து பணிந்துவிடுவான் என எவரும் கனவு காணமுடியாது.

இயற்கை பொய்த்தாலும் உழைப்புப் பொய்க்காது என்பதில் தமிழர்கள் நம்பிக்கை கொண்டவர்கள் என்பதால் இன்று இடியுண்டு மண்ணிலும், இடர்நிறைந்த வாழ்விலும் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கிறார்கள்.

இந்தக் கம்பீரத்தின் பின்பலம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் தொலைநோக்குச் சிந்தனையுடன் கூடிய செயற்பாடுகளேயாகும். பிறர் மீது தங்கிநிற்கும் பொருளாதாரத்திலிருந்து தன்னிறைவுப் பொருளாதார வளர்ச்சியை நோக்கி எமது வடக்கு - கிழக்கு தாயக மண் முன்னெடுப்புக்களை மேற்கொண்டுவரும் இன்றைய சூழலில், நாம் எதிர்காலத்தில் எமது பொருண்மிய வளங்களை நவீன அறிவியல் உத்திகளைப் பயன்படுத்தி மேம்பாடடையச் செய்யவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து எமது செயற்திட்டங்களை வகுக்கவேண்டிய காலகட்டத்தில் நாம் நிற்கிறோம்.

கடந்த மூன்று நாட்களாக கிளிநொச்சி, வட்டக்கச்சியில் நடைபெற்றுவரும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் விவசாய தொழில் நுட்பக் கண்காட்சி எமது பொருளாதார வளர்ச்சி அடுத்த கட்டத்தில் எத்தகைய தொழில் நுட்பத்திறன்களைப் பயன்படுத்தி தனது செயற்பாடுகளை விஸ்தரிக்கவேண்டும் என்பதை அறிவுறுத்துவதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

எமது தாய் மண்ணின் எதிர்காலம் அதன் பொருண்மிய வளத்தின் வளர்ச்சிப் போக்கின் பலத்திலேயே தங்கியுள்ளது என்பதே நாம் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயமாகும்.

அது குறித்து நாம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பரீதியில் சிந்தித்து செயற்படுவது காலத்தின் அவசியமாகவும் உள்ளது.

# நாடும் நடப்பும்




# கிழக்கில் முஸ்லிம் அடிப்படைவாத அமைப்பு; இந்தியப் புலனாய்வுத்துறை அதிகாரி தகவல்!

கிழக்கில் முஸ்லிம் அடிப்படைவாத அமைப்பு ஒன்று உருவாகி வருவதாக இந்தியப் புலனாய்வுதுறை அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி, இந்தியப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்திய அமைதி காக்கும் படை இலங்கையில் தங்கியிருந்த காலப்பகுதியில், இந்தியப் படைகளின் புலனாய்வு அதிகாரியாக இலங்கையில் கடமையாற்றிய கேணல் ஹரிகரன் என்ற ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி இந்தக் கருத்தை வெளியிட்டார்.

முஸ்லிம் இளைஞர்கள் குழு ஒன்று விடுதலைப்புலிகளுக்கு எதிராக ஆயுதப்போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு தயாராகிவருவதாகப் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஓசாமா அமைப்பு என்று பெயரிடப்பட்டுள்ள இந்த அமைப்பு தனது அலுவலகத்தை திருகோணமலை - கிண்ணியா பகுதியில் அண்மையில் திறந்துள்ளதாகவும், கடந்த ஐந்து ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் அடிப்படைவாத கருத்துக்களின் பால் அதிக நாட்டம் கொண்டிருப்பது தெரியவந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

கிழக்கில் முஸ்லிம் ஆயுதக்குழு ஒன்று தோற்றம் பெறுவது, இலங்கையின் பாதுகாப்புக்கு மட்டுமன்றி, இந்தியாவின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமையும்

தற்போது இலங்கைக்கான பாகிஸ்தானிய தூதுவராக பதவியேற்றுள்ள பாகிஸ்தானின் முன்னாள் புலனாய்வுத் துறை அதிகாரி பஷீர் வாலி இந்த அடிப்படைவாத அமைப்புக்கு உதவி புரியலாம் என்றும், சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது பஷீர் வாலி பதவி ஏற்ற காலப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் சிலருக்கு புலமைப்பரிசில் வழங்கி, பாகிஸ்தானுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், இவர்கள் அங்கு எதனைக் கற்றுக்கொள்ளப்போகின்றார்கள் என்பதே தற்போது எழுந்துள்ள முக்கிய கேள்வி என்றும் கேணல் ஹரிகரன் கூறினார்.

## சிறந்த விவசாயிகளாக தெரிவானோர் விபரம்

விவசாயத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட இந்த ஆண்டுக்கான சிறந்த விவசாயிகள் போட்டியில் வலி. வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பின்வருவோர் சிறந்த விவசாயிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

வினைத்திறனாக நிலத்தைப் பயன்படுத்துதல் போட்டியில் - கணபதி முத்துலிங்கம், கோணாவிளை, வசாவிளான்.

வதிவிட வேளாண்மைப் போட்டியில் - சிவனேசன் ரஞ்சனா, முருங்கையற்புலம், அளவெட்டி.

பெண் தலைமைத்துவம் தாங்கும் போட்டியில் - செல்லத்துரை செல்வரஞ்சிதம், சாத்தனாவத்தை, துர்க்காபுரம். ஆகியோர் தெரிவாகியுள்ளனர். (101)

## சாவகச்சேரி புல்லாந்தி குளத்தை புனரமைக்குமாறு கோரிக்கை

(தென்மராட்சி)

சாவகச்சேரி விளைவேலியிலுள்ள புல்லாந்திக் குளத்தை உடனடியாகப் புரனமைப்புச் செய்யும்படி இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விவசாயத்தை நம்பியிருக்கும் இந்தப் பகுதியில் வாழும் மக்களுடைய நீரின் ஆதாரம் இந்தக் குளம்தான்.

தற்பொழுது இந்தக் குளம் தூர்ந்துபோகும் நிலையிலுள்ளதாலும், மாரிகாலம் நெருங்குவதாலும் உடனே இந்தக் குளத்தைப் புனரமைப்புச் செய்து இந்தப் பகுதி மக்களின் ஜீவாதாரத்தைக் காப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்துச் செயற்படுத்துமாறு அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (17)

# பயிற்சிக்குச் சமூகமளிக்காத பட்டதாரிகளுக்கு நாளொன்றுக்கு 200 ரூபா கழிக்கப்படுமாம்!

அரச துறைகளில் நியமனம் வழங்குவதற்காக இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகள் இந்தவாரம் பயிற்சிக்கு சமூகமளிக்காது விடுவது அல்லது மாதத்தில் 7 நாட்கள் பயிற்சிக்கு சமூகமளிக்காது விடுவது போன்றன குறிப்பிட்ட பயிற்சியிலிருந்து விடுபடுவதற்கான காரணமாகக் கொள்ளப்படும் என நிதியமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அனைத்துப் பட்டதாரிகளுக்கும் தெரியப்படுத்தியுள்ளது.

எனினும், பயிற்சிக்குச் சமூகமளிக்காத பட்டதாரிகள் - மாவட்ட வைத்திய அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மருத்துவ சான்றிதழின் அடிப்படையில், மருத்துவ காலத் துக்கு வழங்கப்படும் விடுமுறைகள் அந்த 7 நாள் நிபந்தனை யில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.

எனினும், எந்தக் காரணத்தைக் கொண்டும் பயிற்சிக்குச் சமூகமளிக்காத ஒவ்வொரு நாளுக்கும் 200 ரூபா கழிக்கப்படும் எனவும் நிதியமைச்சின் முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் பட்டதாரிகளுக்குக் கடிதமூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## நெடுந்தீவில் நடமாடும் செயலக சேவை

இந்தியாவிலிருந்து நாடு திரும்பியோரின் தேவைகளைப் பூரத்திசெய்யும் வகையில் - யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தினரின் ஏற்பாட்டின்கீழ், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் இந்தியாவில் நிகழ்ந்த பிறப்பு, இறப்புக்களைப் பதிவு செய்தல், தேசிய அடையாள அட்டை விண்ணப்பங்களைப் பெறல், தேர்தல் இடாப்பில் பதிவுசெய்யப்படாத பெயர்களைப் பதிவுசெய்தல், மீளக் குடியமர்வுக் கொடுப்பனவுக்கு விண்ணப்பித்தல், சொத்து இழப்பீடு தொடர்பாக விண்ணப்பம் செய்தல் மற்றும் ஏனைய தேவைகளையும் பூர்த்திசெய்தல் ஆகிய விடயங்கள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை - இந்த நடமாடும் சேவை தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (113)

## விலக்கப்பட்ட சிறைச்சாலை காவலர்கள் மீண்டும் சேவையில் இணைப்பு

யாழ்.சிறைச்சாலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட சிறைக் காவலர்கள் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில், சிறைக்காவலர்களாக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்களில் 28 பேருக்கும், பின்னர் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் ஒப்பந்த காலத்தை நீடித்து வழங்காது, அவர்களை சேவையிலிருந்து இடைநிறுத்தியது.

இதனையடுத்து அவர்கள் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கை விசாரணைசெய்த உயர்நீதிமன்றம் இவர்களை உடனடியாக சேவையில் இணைத்துக்கொள்ளுமாறு சிறைச்சாலை ஆணையாளருக்கும், உள்நாட்டலுவல்கள் அமைச்சருக்கும் உத்தரவிட்டது.

இதனையடுத்து இவர்களில் 16 பேர் மீண்டும் யாழ். சிறைச்சாலையில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

இவ்வாறு இடைநிறுத்தப்பட்ட 28 பேரில் 2 பேரே தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


இதேவேளை - நேற்றுமுன்தினம் வெளியாகிய செய்தியில் இந்து கலாசார அமைச்சிலிருந்து விலக்கப்பட்டோர் மீண்டும் சேவையில் இணைப்பு எனத் தவறுதலாகச் செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வாரநோக்கு... - யாழவன்

# எமது தாயகத்து வளங்களைப் பயன்படுத்தி பொருளாதாரத்திலே தன்னிறைவு காண்போம்

**“ இராணுவ ரீதியாகவும், அரசியல் இலங்கை அரசுக்கு நிகராக வளர்ந்துள்ள தமிழ் மக்கள் பொருளாதாரப் பலத்திலும், வளம் பெறவேண்டிய தேவை நிறையவேயுள்ளது. எதிர்காலத்திலே இடைக்கால நிர்வாக அலகு ஒன்றோ அல்லதுபோனால் தமிழர்களின் நிரந்தர இலட்சியமான தமிழீழம் கிடைத்தாலோ, அதனைச் சரியான முறையிலே நிர்வகிப்பதற்கு பொருளாதார பலம் என்பது மிக முக்கியமானதாகும். அதனைப் பெற்றுக் கொள்வதற்கு எமது பிரதேச வளங்களைத் தற்போதைய நவீன உலகின் தொழில் நுட்பங்களுடன் இணைந்து தன்னிறைவு நோக்கி பயணிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். ”**

கடந்தவாரம் வன்னிப் பெருநிலப் பரப்பில் வட்டக்கச்சி விவசாய கல்லூரியிலே விவசாயக் கண்காட்சியொன்று நடைபெற்றுள்ளது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் முன்னெடுக்கப்பட்ட இந்தக் கண்காட்சியானது தமிழர் தாயகம்



பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை வகுப்பதற்கு பெரிதும் துணையாக அமைந்துள்ளது.

கடந்தகாலப் போரின் காரணமாக முற்றிலும் சிதைக்கப்பட்ட, திட்டமிட்டு அழிக்கப்பட்ட தமிழர் தாயகத்தின் பொருளாதாரமானது மீண்டும் புத்துயிர் பெற ஆரம்பித்துள்ளமையை இந்தக் கண்காட்சி நிகழ்வு கோடிட்டு காட்டிநிற்கிறது. தமிழீழ தேசமெங்கும் பரந்து கிடக்கும் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி எவ்வாறு பொருளாதார ரீதியாக தன்னிறைவு காண்பது என்பதை இந்தக் கண்காட்சி தெளிவாக புரிய வைத்துள்ளது.

இராணுவ ரீதியாகவும், அரசியல் இலங்கை அரசுக்கு நிகராக வளர்ந்துள்ள தமிழ் மக்கள் பொருளாதாரப் பலத்திலும், வளம் பெறவேண்டிய தேவை நிறையவேயுள்ளது. எதிர்காலத்திலே இடைக்கால நிர்வாக அலகு ஒன்றோ அல்லதுபோனால் நமிழர்களின் நிரந்தர இலட்சியமான நமிழீழம் கிடைத்தாலோ, அதனைச் சரியான முறையிலே நிர்வகிப்பதற்கு பொருளாதார பலம் என்பது மிக முக்கியமானதாகும். அதனைப் பெற்றுக் கொள்வதற்கு எமது பிரதேச வளங்களைத் தற்போதைய நவீன உலகின் தொழில் நுட்பங்களுடன் இணைந்து தன்னிறைவு நோக்கி பயணிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இலங்கையின் வளங்களுள் பெரும் பகுதியானவை தமிழர் தாயகப் பகுதியிலேயே செறிவடைந்துள்ளன. கடல் வளமாயினும் சரி, கனிய வளமாயினும் சரி, விவசாய வளமாயினும் சரி எல்லாமே தமிழர் தாயகத்திலேயே செறிவடைந்துள்ளன. மீன் பிடித்துறையிலே புகழ் பெற்று விளங்கிய மற்றும் விளங்கும் இடங்களான மயிலிட்டி, வடமராட்சிப் பகுதிகள், குருநகர், நாவாந்துறையும், இயற்கைத் துறைமுகமான-திருகோணமலை உள்ளிட்ட பருத்தித்துறை, காங்கேசன்துறை துறைமுகங்களும், முத்து குளிக்கும் மன்னார் கடலும், இல்மனைற்று எனும் பெறுமதி வாய்ந்த கனியுப்பு வளத்தைக் கொண்ட புல்மோட்டையும் தமிழர் தாயகப் பகுதிகளேயாகும்.

ஆனால், சிங்கள அரசுகளின் திட்டமிட்ட செயற்பாடுகளின் காரணமாக இந்த வளங்களும், பல சூறையாடப்பட்டும், திட்டமிட்டு அழிக்கப்பட்டும் கைவிடப்பட்ட பிரதேசங்களாகவும், உயர் பாதுகாப்பு வலயங்களாகவும் மாற்றப்பட்டும் உள்ளன. வளங்கள் பல நிறைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்தை தனியாக பிரித்து, தமிழீழம் என தமிழர்களிடம் ஒப்படைத்தால், அவர்கள் பொருளாதார ரீதியாக தம்மைப் பலப்படுத்திக் கொள்வார்கள். இது இலங்கைக்கு நெருக்கடியாக அமையும் என்பதை நன்குணர்ந்த சிங்களத் தலைவர்களே தமது செம்மறித்தனமான வாக்காளர்களை வைத்துக்கொண்டு இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணாமல் அதனை இழுத்தடித்து வருகிறார்கள்.

அதிலும் மிகவும் வேதனையான விடயம் எதுவெனில், தனது தான் தோன்றித்தனமான நடவடிக்கைகளின் காரணமாக வங்குரோந்து நிலையை அடைந்துள்ள இலங்கை அரசாங்கமானது. திணைக்களங்கள் தொடக்கம் பல அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தி வருகிறது. அதனை விட தமிழர் தாயகம் பகுதிகளை வேறு நாடுகளுக்கு குறித்த காலத்துக்கு குத்தகைக்கு கொடுப்பதன் மூலமும் அரசு தன்னை காப்பாற்றிக்கொள்கிறது.

இதன் கட்டங்களாகவே திருகோணமலையிலுள்ள எண்ணைக் குதங்கள் இந்திய அரசுக்கு குத்தகைக்கு வழக்கப்பட்டதுடன், புல்மோட்டையிலுள்ள இல்மனைற்று - அமெரிக்க அரசுக்கு அகழ்ந்து விநியோகப்பட்டது. இந்த நடவடிக்கைக்கும் விடுதலைப்புலிகள் காட்டிய எதிர்ப்பு காரணமாகவே கைவிடப்பட்டதுடன், அமெரிக்க அரசுக்கும் விடுதலைப்புலிகள் மீதொரு தாழ்ப் புணர்ச்சியும் தோற்றம் பெற்றது. பிற நாடுகளின் வளங்களையே சுரண்டிச் சுரண்டி தனது பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொண்ட அமெரிக்கா மிகப் பெறுமதி வாய்ந்த விமானங்களின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் உலோகமான இல்மனைற்றை தமிழர் தாயகம் பிரதேசமான புல்மோட்டையிலிருந்து அடியோடு வறுக திட்டமிட்டது. ஆனால் தெளிவான பொருளாதாரக் கொள்கைகளை சுமந்து கொண்டு, தூரநோக்குச் சிந்தனையோடு விடுதலைப் போராட்டத்தை வழி நடத்தி வரும் புலிகளின் எதிர்ப்புக் காரணமாக அமெரிக்க அரசின் நட்டமானது பிரசுரித்துப் போனது.

எப்போதும் ஒரு நாட்டின் பொருளாதார எழுச்சிக்கு காரணமாக அமைவது திட்டமிடுகை ஆகும். இந்த திட்டமிடுகை சிறப்பாக அமையப் பெற்றாலே நீண்ட காலமாக பொருளாதார வளர்ச்சியை அனுபவிக்க முடியும். இது விடயத்திலே விடுதலைப் புலிகள் மிகவும் தெளிவாகவுள்ளனர். ஆனாலும் அவர்களையே கட்டுப்படுத்தும் வகையிலும் சில அரசியல் சூழ்நிலைகள் தோற்றம் பெற்றுள்ளன.

குறிப்பாக, தமிழீழ தேசத்தின் பொருளாதார மேம்பாடு தொடர்பாக ஆராய்ந்து, அது தொடர்பான முடிவுகளையும் மறைந்த பேராசிரியர் துரைராஜா மூலமாக விடுதலைப்புலிகள் வெளியிட்டு இருந்தனர்.

ஆனால், இன்று அரச கட்டுப்பாடிலுள்ள தமிழர் தாயகப்பகுதிகளிலே தன்னிச்சையாக கட்டடங்களைக் கட்டுவதும், புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதும் அதிகரித்துள்ளன. இவை அனைத்துமே பேராசிரியர் துரைராஜாவின் சிந்தனைக்கு அமைவாக இடம்பெறவில்லை. இதனால் எதிர்காலத்தில் ஒரு பின்னடைவைச் சந்திக்க வேண்டிவரும். இதனை அனுமதிக்க விடுவது ஆரோக்கியமான விடயமல்ல.

எனவே, பொருளாதார ரீதியாக புரட்சியொன்றை ஏற்படுத்த முயலும் நாம், எமது தேச இட அமைவுகளுக்கு ஏற்ற வகையிலே திட்டங்களை உருவாக்கிக் கொள்ளவேண்டும். இத்தகையதொரு எண்ணப்பாட்டையே கடந்த வாரம் வன்னியிலே நடைபெற்ற விவசாயக் கண்காட்சி உணர்த்துகின்றது.

இந்த நிகழ்வில் பல தென்னிலங்கை நிறுவனங்களும் கூட தமது கண்காட்சி அமைப்புக்களை ஒழுங்கு செய்திருந்ததுடன், தமது பொருட்களின் உற்பத்தியின் போது தாம் கடைப்பிடிக்கும் தொழில்நுட்பங்கள் தொடர்பாகவும் இந்தக் கண்காட்சியிலே விளக்கமளித்திருந்தனர். இதுவே இன்று எமக்கு தேவையாகவுள்ள விடயமாகும்.

தற்போது எமது முடிவுப் பொருட்களை தென்னிலங்கை நிறுவனங்களுக்கான மூலப்பொருளாக விநியோகித்து, பின் அவற்றை அதிக விலை கொடுத்து முடிவுப் பொருட்களாக மீளவும் நாமே பெற்றுக் கொள்கிறோம். இதன் மூலமாக தென்னிலங்கை மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு இலாபத்தை உழைத்துக் கொடுக்கும் நாம், எமது உற்பத்தியையே இன்னொரு வகையாக மீள அனுபவிக்கிறோம் என்பதை உணராதுள்ளோம்.


உதாரணமாக - வன்னிப் பெருநிலப்பரப்பிலே அளவுக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படும் பாலை திரவ நிலையிலே பெற்றுக் கொள்ளும் நிறுவனங்கள், பின் அதனை பவுடராக்கி பைகளில் அடைத்து, மீளவும் எமக்கே விநியோகிக்கின்றன. ஏன் இந்த நிலை தொடர அனுமதிக்கவேண்டும். நாமே பாலைப் பவுடராக்கி பால்மாவைத் தயாரிக்கக் கூடிய சூழலை உருவாக்கிக் கொண்டால், எவ்வளவு மலிவாக பால்மாவை பெற்றுக்கொள்ள முடிவதுடன், தேச பொருளாதாரத்தையும் உயர்த்த முடியும். இது தொடர்பாகவே இன்று நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

இன்னொரு உதாரணமாக - ஆனையிறவு உப்பளத்தை எடுத்துக் கொண்டால், எமது தமிழீழத்து தாய் உவந்தளித்த இனிய சொத்து. தென்னிலங்கையிலுள்ள உப்பளங்களைக காட்டிலும் அதிக படியான விளைச்சலை வழங்கும் உப்பு உற்பத்தித் தளம் முன்னர் 1200 ஏக்கர் நிலப் பரப்பைக் கொண்டிருந்த இந்த உப்பளைத்திலே, தற்போது 60 ஏக்கர் நிலப்பரப்பிலேயே உப்பு உற்பத்தி நடைபெறுகிறது. இருந்தும் கூட ஆனையிறவு உப்பை எமது தேவைகளுக்கு, மேலதிகமாக தென்னிலங்கைக்கும அனுப்பக்கூடிய அளவுகக உப்பு உற்பத்தி நடைபெறுகிறது. மேலதிகமாக உற்பத்தி செயயப்படும் உப்பை உலர் நிலையில் தொகையாக பெற்றுச் செல்லும் தென்னிலங்கை வியாபாரிகள் பின்னர் அதனைப் பைகளில் அடைத்து விற்பனைக்கு விடுகின்றனர்.

ஏன் நாமே எமது உப்பை பைகளில் அடைத்து, இலங்கை முழுவதும் விநியோகிக்க முடியாது என நீங்கள் சிந்திக்க வேண்டும். உரிய தொழில்நுட்ப வசதிகள் இன்மையினாலேயே எம்மால் பொதியிடலை சிறப்பாகவும், துரிதமாகவும் மேற்கொள்ள முடியாதுள்ளது. எனவே புதிய தொழில்நுட்பங்களின் தேவை எமக்கு அதிகமாகவுள்ளது. இதனை உணர்ந்து தமிழீழத்துக் கல்வியாளர்களும், சிந்தனையாளர்களும் செயற்படவேண்டும்.

கற்ற கல்வியை பிறநாடுகளிலே விற்பதற்காக ஓடும் தமது வியாபாரத்தனமான புத்தியைக் கைவிட்டு, சொந்த மண்ணை சுடர்விடச் செய்வதற்காக பணியாற்ற வேண்டும். இந்த வரலாற்றுப் பணியிலே இணைவதற்கு அனைவரும் முன்வரவேண்டும்.

அதற்கு மேலாக வனக்காப்புத் தொடர்பாகவும் நாம் ஆராயவேண்டியுள்ளது. எமது தாயக வனத்தை அரசு திட்டமிட்டு அழிக்க, நாடும் எம்மையுமறியாமல் எமது தாயக வனத்தை அழித்துக் கொண்டிருக்கிறோம். இந்தக் கோணத்திலேயே கடந்த வாரம் நடைபெற்ற குருநகர்



மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தை நாம் நோக்க வேண்டும்.

எமது குறுகிய இலாப நோககத்துக்காக இழுவைப்படகுகளைப் பாவித்து, எதிர்கால கடல் வளத்தை இன்றே அடியோடு அழிக்கும் விசமத்தனமான நடவடிக்கையில் எமது மீனர்வர்கள் சிலர் ஈடுபட்டுக் கொண்டுள்ளனர். முன்னர் இந்திய இழுவைப் படகுகளின் தொல்லை அதிகரித்த போது, அதற்கு எதிராக ஒருமித்து குரல் கொடுத்த நாமே இன்று தவறிழைக்கிறோம்.

எமது வசதிகளை கருத்திற் கொண்டு இழுவைப்படகுகளை மீன் பிடித் தொழிலிலே பயன்படுத்துவதனால், மீன்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலியல் அமைப்புக்கள் அழிவதுடன், அவற்றுக்கான உணவு மூலங்களும் இல்லாமற்போகின்றன. இதனால் எதிர்காலத்திலே மீன்களின் இனமே இல்லாமலேயே எமது கடல் மாறும் அபாயநிலை தோன்றியுள்ளது.

இதனை உணராமல் செயற்படும் சில மீனவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் தேசவிரோத சக்திகள் விடுதலைப் புலிகளையும், மீனவர்களையும் சீண்டு முடிவதிலே முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன. இந்த விடயம் தொடர்பாக தமிழர் தரப்பு அதிக விழிப்பாக இருகக வேண்டும். தமிழினத்தை அழிப்பதற்கு தூபம் போடும் சக்திகளுக்கு ஒருபோதும் துணைபோகக கூடாது. இதனை மனதில் வைதது்ச் செயற்படவேண்டும்.


நாம் பொருளாதார ரீதியாக பலம் பெற்று, எமது உற்பத்திகளை எமது தாயக கடல் மூலமாக நேரடியாகவே வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்போமாக இருந்தால், நாமும் ஒரு தனிநாடாகக் கருதப்படுவோம்.காலப்போக்கிலே கத்தியின் இரத்தமன்றி, துப்பாக்கியின்றி, வெறும் பொருளாதாரப் புரட்சி மூலமாகவே நாம் தமிழீழத்தை உருவாக்கிக் கொள்ள முடியும். அதன் போது சர்வதேச நாடுகளும் தமது பொருளாதார நலன்கருதி தமிழீழத் தை அதிகரிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படும்.

எனவே, பொருளாதாரப் புரட்சி ஒன்றின் மூலமாக புதிய தேசத்தைப் படைப்போம். அதற்காக எமது தேசத்தின் புவியியல் கேந்திர முக்கியத்துவங்களை நலனில் கொண்டு பொருளாதார கொள்கைகளை வளர்த்துக் கொள்வோம். நாளை நமதாகும். தனி நாடும் எமதாகும்! ☼



## மீண்டும் அமெரிக்க ஜனாதிபதியானால்

# பயங்கரவாதத்துக்கு எதிரான போரை விஸ்தரிக்கப்போவதாக புஷ் தெரிவிப்பு!



(வொஷிங்ரன்)

அமெரிக்க ஜனாதிபதியாகத் தான் தேர்ந்தெடுக்கப்பட்டால் - உலகளாவிய ரீதியில் பயங்கரவாதிகளுக்கு எதிராக தாக்குதலை நடத்தும் அதேவேளை, அமெரிக்காவைப் பாதுகாக்கப்போவதாக ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அமெரிக்க குடியரசுக் கட்சி சார்பான ஜனாதிபதி வேட்பாளராக புஷ் தெரிவுசெய்யப்பட்டபின்னர் அவர் நிகழ்த்திய நீண்ட உரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது -

நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் அடுத்த நான்கு வருடங்களுக்குள் ஆப்கான் மற்றும் ஈராக்கில் என்ன செய்யவேண்டும் என்ற நோக்கம் என்னிடம் உள்ளது.

கடந்த 2001 செப்ரெம்பர் நடந்த தாக்குதலின் பின் எனது தலைமையிலான அமெரிக்க நிர்வாகம் உலகம் முழுவதிலுமுள்ள பயங்கரவாதிகளுக்கு எதிரான தாக்குதலை நடத்திவருகிறது.

அமெரிக்காவின் பாதுகாப்பிற்கான நிதி மூன்றுமடங்காக அதிகரிக்கப்பட்டதுடன், இராணுவம் மற்றும் புலனாய்வுத்துறை என்பன மேலும் வலுவாக்கப்பட்டது. நாம் அமெரிக்காவுக்கு வெளியிலேயே பயங்கரவாதிகளுக்கு எதிரான தாக்குதலை நடத்திவருகின்றோம். எனவே, நாம் அமெரிக்காவிற்குள் எவ்வித பிரச்சினையையும் அவர்களால் எதிர்கொள்ளவில்லை.

எமது வெற்றிகரமான மூலோபாயத்தினால் ஆப்கானிலுள்ள ஒசாமா பின்லேடனின் அல் கொய்டா அமைப்பினர் விரட்டப்பட்டதுடன், அவர்களின் இருப்பிடம் எனக் கருதப்படும் சவுதி மற்றும் பாகிஸ்தான் நாடுகளிலும் அவர்கள் விரட்டியடிக்கப்பட்டிருக்கின்றனர்.

எனது ஆட்சிக்காலப்பகுதியில் ஏற்பட்ட அழுத்தங்களாலேயே லிபியா தனது அணுவாயுதத் திட்டங்களைக் கைவிட்டது. அத்துடன் அல்கொய்டா தீவிரவாதிகளின் முக்கிய உறுப்பினர்களில் முக்கால் வாசிப்பேர் நான் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றபின்னரே கொல்லப்பட்டனர்.

செப்ரெம்பர் 11 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் மூலம் பெற்ற பாடத்தினைத் நான் மறக்கவில்லை. இந்தத் தாக்குதலின் காரணமாக அல்கொய்டாவிலிருந்து அமெரிக்காவைப் பாதுகாப்பதற்காகவே நான் ஆப்கானிஸ்தான் மீது போரை ஆரம்பித்தேன். அமெரிக்காவை எந்தத் தருணத்திலும் பாதுகாப்பதற்காகவே நான் செயற்படுவேன்.

ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற சர்வாதிகார ஆட்சியினை நான் கவிழ்த்தபின்னர் 50 மில்லியன் மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கின்றனர். மத்திய கிழக்கின் விடுதலையை முன்னிலைப்படுத்தியே நான் செயற்பட்டு வருகிறேன்.

நான் 2000 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் நாட்டு மக்களது வாழ்க்கைத் தரத்தினைக் கட்டியெழுப்புவதற்காக உழைத்துள்ளேன். இந்தக் காலப் பகுதியில் தனது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்காக ஏனைய நாடுகளுக்குச்செல்ல எந்த அமெரிக்கரும் முயலவில்லை.

அத்துடன் நான் ஆட்சிக்குவரும் பட்சத்தில் அமெரிக்கரின் கல்வித் தரம் மேலும் உயர்த்தப்படும். சுகாதாரம், முதியோர் பராமரிப்பு, வேலை வாய்ப்புகள், வரிவிலக்கு போன்றவற்றில் முக்கிய கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேசமயம் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜோன் ஹெரியையும் - ஜோர்ஷ் புஷ் கடுமையாக விமர்சித்தார்.

### உலக நோக்கு

## ரஷ்ய பணைய நாடகம்; முறியடிப்பு நடவடிக்கை











# வைகோ மீதான பொடா வழக்கை வாபஸ்பெற நீதிமன்றம் அனுமதி மறுப்பு

(சென்னை)

ம.தி.மு.க தலைவர் வைகோ மீதான பொடா வழக்கை வாபஸ் பெறக்கோரும் தமிழக அரசின் மனுவை, பொடா நீதிமன்றம் நிராகரித்தது. தமிழக அரசின் கோரிக்கைக்கு அது அனுமதி மறுத்தது.

மத்திய அரசின் மூலமாக நிருபிக்கப்பட்ட பொடா மறு ஆய்வுக் குழு, வைகோ மீதான குற்றச்சாட்டை ஆராய்ந்து பொடா சட்டத்தில் கைது செய்யும் அளவுக்கு மதுரை திருமங்கலக் கூட்டத்தில் வைகோவின் பேச்சு அமையவில்லை எனக் கருத்துக் கூறியது. மேலும் வழக்கை உடனே வாபஸ்பெறும்படி தமிழக அரசுக்கு உத்தரவிட்டது.

ஆனால், தமிழக அரசு இதனை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தது. வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம் பொடா மறு ஆய்வுக்குழுவின் உத்தரவைப் பின்பற்றும்படி உத்தரவிட்டது.

பறகு தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்தது. உச்சநீதிமன்றமும் சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதிசெய்தது. இதையடுத்து வேறு வழியில்லாமல் தமிழக அரசு வைகோ மீதான பொடா வழக்கைத் திரும்பப்பெறுவதாக மனுச்செய்தது.

அந்த மனு மீதான விசாரணை பூந்தமல்லி பொடா நீதிமன்றத்தில் இந்த வழக்கை விசாரித்துவரும் நீதிபதி ராஜேந்திரன் முன்னிலையில் நேற்றுமுன்தினம் காலை விசாரணைக்கு வந்தது. மனுவைப் பரிசீலனை செய்த நீதிபதி ராஜேந்திரன் அதனை நிராகரித்தார். வைகோ மீதான பொடா வழக்கை வாபஸ்பெற அனுமதி மறுத்துவிட்டார்.

அவர் தனது தீர்ப்பில் - தமிழக அரசு தனது மனுவில் பொடா மறு ஆய்வுக்குழுவின் உத்தரவின்பேரிலேயே வழக்கை வாபஸ்பெறுவதாகக் கோரியுள்ளது. வேறு எந்தக காரணமும் கூறவில்லை.

ஆகவே இதனைமட்டும் காரணமாகக்கொண்டு வழக்கை வாபஸ் பெற அனுமதியளிக்கமுடியாது. மேலும் இந்த வழக்கை வாபஸ்பெற உத்தரவிட்ட பொடா மறு ஆய்வுக் குழு தனது ஆய்வில் இந்த நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் வழக்கு விசாரணை விபரங்களைக் கருத்தில்கொள்ளவில்லை. அதனை உட்சென்று ஆராயவுமில்லை என்று கூறினார்.

இதன்மூலம் வைகோ வழக்கிலிருந்து விடுதலையாவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

## அமெரிக்க படைத்தளத்துள் புலி புகுந்ததால் கிலி!

(வொஷிங்ரன்)

அமெரிக்காவின் லூசியானாவில் உள்ள போர்ட் போல்க் ராணுவத் தளத்துக்குள் ஒரு புலி புகுந்துவிட்டது. அது எப்படி வந்தது என்று தெரியவில்லை.

அதைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் 100 அமெரிக்க இராணுவ வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 1 லட்சத்து 98 ஆயிரம் ஏக்கர் பரப்புள்ள இராணுவத்தளம் பைன் மரங்கள் நிறைந்த குன்றுப்பகுதியாக விளங்குகிறது.

இதனால் இராணுவக் ஹெலிகொப்ரர்களில் மயக்க ஊசியுடன் இராணுவ வீர்கள் தேடுதல் வேட்டையைத் தொடங்கியுள்ளனர். இந்தப் புலியை முதன்முதலில் கடந்த வெள்ளிக்கிழமை இராணுவ வீரர்கள் பார்த்துள்ளனர். அதன் பிறகு 7 முறை அது இராணுவத்தினர் கண்ணில் தட்டுப்பட்டது. உள்ளூர் மக்களை காட்டுப் பகுதிக்குள் செல்லவேண்டாம் என்று இராணுவம் எச்சரித்துள்ளது.

## சேது சமுத்திரத் திட்டத்திற்கு இந்திய அரசு அனுமதி வழங்கியது

ரூபா 4500 ஆயிரம் கோடி செலவிலான சேது சமுத்திரத்திட்டத்தை நிறைவேற்ற இந்திய மத்திய அரசு கடந்த வியாழக்கிழமை ஒப்புதல் அளித்துள்ளது.


மன்னார் வளைகுடாவிலிருந்து பாக்ஜலசந்தி வழியாக வங்கக் கடலுக்குக் கப்பல்கள் செல்ல இத்திட்டம் வழி வகுக்குகிறது. இத்திட்டத்தின்படி கப்பல்களின் 400 கடல் மைல்கள் பயணதூரம் குறையும். இத்திட்டத்தை நிறைவேற்ற இந்திய கப்பல் போக்குவரத்துக் கழகமும், தூத்துக்குடி துறைமுகமும் தலா ரூபா 50 கோடி முதலீடு செய்யும். மேலும் சென்னைத் துறைமுகமும் எண்ணூர் துறைமுகமும் விசாகப்பட்டினம் துறைமுகமும் பாரதீப் துறைமுகம், டிசிஐ ஆகியவை தலா ரூ 30 கோடி அளவுக்குப் பங்களிக்கவுள்ளன. மீதமுள்ள தொகையை இந்திய அரசு ஒதுக்கும்.

இந்தத் திட்டம் குறித்து நிதியமைச்சர் சிதம்பரம் தெரிவித்ததாவது - சேது சமுத்திரத்திட்டத்தை நிறைவேற்ற சேது சமுத்திரக் கழகம் எனும் ஒரு சிறப்பு அமைப்பு உருவாக்கப்படும். இக் கழகம் திட்டத்துக்குத் தேவையான நிதியைத் திரட்டி திட்டத்தை நிறைவேற்றும்.

இந்தப் புதிய நிறுவனத்தின் முதலீடு ரூ.800 கோடியாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

இராமேஸ்வரம் அருகே கடலில் சேது சமுத்திரக் கால்வாய் அமைக்கப்படும் இடத்தை மத்திய கப்பல் மற்றும் தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் டி.ஆர்.பாலு, அதிகாரிகள் குழுவுடன் இன்று பார்வையிடுகிறார்.

# பொடா நீதிமன்றத்துக்கு எதிராக குற்றம் சாட்டுகின்றார் வைகோ!



(சென்னை)

தன்மீதான பொடா வழக்கை விசாரித்துவரும் பூந்தமல்லி பொடா நீதிமன்றம் ஆரம்பத்திலிருந்தே தனக்கு எதிரான நிலையை எடுத்து வருவதாக ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

திண்டிவனத்தில் தனது பாதயாத்திரையை மேற்கொண்டிருந்த அவரிடம் பொடா நீதிமன்றம் உங்கள் மீதான பொடா வழக்கை வாபஸ்பெற அனுமதி மறுத்துள்ளதே என்று கேட்ட போது மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

இறுதியில் நீதி நிச்சயம் வெல்லும் என்று கூறினார். பொடா நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து வழக்குத் தொடரும் எண்ணம் உள்ளதா என்று செய்தியாளர்கள் கேட்ட போது, என்மீது போடப்பட்ட வழக்கு தவறு என்று உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளேன் என்றார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மல்வத்தை பீடாதிபதியைச் சந்திக்க விடுதலைப் புலிகள் சம்மதம் தெரிவிப்பு

மல்வத்தை பீடத்தின் மகா நாயக்க தேரர் சிறிசுமங்கல தேரரைச் சந்திப்பதற்கு தாம் தயாராக இருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

மல்வத்தை பீட மகாநாயக்க தேரர் தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்திப்பதற்கு விரும்புவதாக, மலையக மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் விடுதலைப் புலிகளுக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து, மகாநாயக்க தேரரைச் தாம் சந்திக்கத் தயார் என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரனுக்கும் ,தமிழீழவிடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்குமிடையில் நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற சந்திப்பின்போதே தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த விருப்பத்தைத் தெரிவித்துள்ளனர்.

# ஒட்டமாவடியில் கிரனைட் வீச்சு!

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஓட்டமாவடியில் நேற்று அதிகாலையில் கிரனைட் வீச்சு சம்பவமொன்று இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 2 மணிக்கு இந்த கிரனைட் வீச்சுச் சம்பவம் இடம் பெற்றது.

ஓட்டமாவடியில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றை இலக்கு வைத்து கிரனைட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.ஜி.தர்மவத்தன தலைமையிலான குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

தேசிய கல்வியியல் கல்லூரிகளில் ஆசிரியர் கல்வி தொடர்பாக சேவை முன் தொழிற்பயிற்சிக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்களை கல்வி அமைச்சு கோரியுள்ளது.

கடந்த வருடம் க.பொ.த. உயர்தரப் பாட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்த 25 வயதுக்கு உட்பட்டவர்களே விண்ணப்பங்களை அனுப்பிவைக்கமுடியும்.

ஆரம்பக்கல்வி, விஞ்ஞானம், கணிதம், உடற்கல்வி, உணவுத் தொழில்நுட்பம், ஆங்கிலம், இந்து சமயம், பௌத்தம், றோமன் கத்தோலிக்கம், கிறிஸ்தவம், நூலக விஞ்ஞானம், தகவல் பரிமாற்ற தொழில்நுட்பம், சங்கீதம், நடனம், சித்திரம், நாடகமும் அரங்கியலும், தகவல் தொழில்நுட்பம் போன்ற பாடநெறிகளுக்கே அனுமதி வழங்கப்படவுள்ளன. இசற்கோர் புள்ளி அடிப்படையிலேயே இந்த அனுமதி வழங்கப்படவுள்ளது.

இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கும்படி கோரப்பட்டுள்ளது.

இந்த விண்ணப்பங்கள் தொடர்பான விபரங்கள் நேற்றுமுன்தினம் வெளியான வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## தலைமையுடன்...

நேற்றுக்காலை விமானப்படை ஹெலிகொப்ரர் மூலம் இவர் கொக்கட்டிச்சோலையிலிருந்து புறப்பட்டு கிளிநொச்சி சென்றடைந்தார்.

கேணல் ரமேஷுடன் மட்டக்களப்பு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் விடுதலைப் புலிகளின் தளபதிகளான ராம், ஜனார்த்தன் ஆகியோரும் கிளிநொச்சி சென்றடைந்தனர்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இராணுவத்தரப்புடனான சந்திப்பில் கேணல் ரமேஷ் பங்கேற்கவுள்ளார்.

நீண்ட நாட்களுக்குப் பின்னர் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்படவேண்டிய விடயங்கள் குறித்து புலிகளின் மட்டு-அம்பாறைப் பிரமுகர்கள் தலைமைப் பீடத்துடன் ஆராய்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பணயக் கைதிகளை...

பெண்கள் உட்பட சுமார் 28 கிளர்ச்சியாளர்கள் இராணுவச் சீருடை அணிந்த நிலையில் தம்மை தெமுராஸ அமைப்பெனத் தெரிவித்தனர். இந்தச் சண்டையில் இவர்களில் 20 பேர் கொல்லப்பட்டதாகவும், அவர்களில் 9 பேர் அராபியர்கள் எனவும் தகவல்கள் தெரிவித்தன.

கொல்லப்பட்ட 150 பேரில் 60 பேரின் உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்தச் சம்பவத்தில் 520 பேர் காயமடைந்திருப்பதாக ரஷ்ய சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். இவர்களில் - 218 பேர் பாடசாலைச் சிறுவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும், மேலும அஞ்சப்படுகிறது. படையினர் பாடசாலைமீது எவ்வித தாக்குதலையும் நடத்துவதற்கு திட்டமிட்டிருக்கவில்லை எனவும் கிளர்ச்சியாளர்கள் வெடிகுண்டுகளைப் பாடசாலைக்குள வெடிக்கவைத்து துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவேளையிலேயே படையினர் பாடசாலையை நோக்கி முன்னேறியதாக ஜனாதிபதி புடினின் முக்கியதொரு உதவியாளரான ஒஸ்லான் பெக் அஷ்லக் கனோவ் தெரிவித்தார்.

கிளர்ச்சியாளர்கள் தாமாகவே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகவும் படையினர் பாடசாலையை நோக்கி முன்னேறுகையில் அவர்கள் தப்பிச்சென்றதாகவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் தப்பிய கிளர்ச்சியாளர்கள் குழுவை படையினர் கலைத்துச் சென்றவேளை மூவர் பிடிபட்டதாகவும், மற்றைய சிலர் வீடொன்றினுள் இருப்பதாகவும், அவர்கள் சரணடைய மறுப்பதால் இராணுவத் தாங்கிகள் அந்த வீட்டைநோக்கி முன்னேறிச் செல்வதாகவும், ரஷ்யாவின் இற்றார் - ராஸ் செயதி நிறுவனம் தெரிவித்தது.

கடத்தி வைக்கப்பட்டிருந்த கடந்த மூன்று நாட்களும் தம்மை அவசர தேவைகளை நிறைவேற்றவோ, நீர் அருநதவோ கிளர்ச்சியாளர்கள் அனுமதிக்கவில்லையென இந்தச் சம்பவத்தில் தப்பிய பணயக் கைதி ஒருவர் தெரிவித்தார்.

# ஊழல் விசாரணையை நிறுத்துமாறு எஸ்.பி.உயர்நீதிமன்றத்தில் மனு!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸநாயக்க தனக்கு எதிராக ஊழல் மோசடி விசாரணைக்குழு மேற்கொண்டுவரும் விசாரணைகளை இடைநிறுத்தும்படிகோரி உயர் நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில் ஊழல் மோசடி விசாரணைக்குழுவின் தலைவர் ஆணையாளர், பணிப்பாளர் நாயகம், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிநிதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மனுவில் தனக்கும் தனது குடும்ப உறவினர்களுக்கும் இழிவை ஏற்படுத்தும் நோக்கில் ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக எஸ்.பி. திஸநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்க சமுர்த்தி அமைச்சராக இருந்த காலத்தில் பான் ஏசியா வங்கியின் பங்குகளை சோதனை செய்தமை மற்றும் 60 மில்லியன் ரூபா செலவில் ஆடம்பர வீடு ஒன்றினைக் கட்டியமை தொடர்பாக ஊழல் மோசடி விசாரணைக்குழு எஸ்.பி.திஸநாயக்கவுக்கு எதிராக விசாரணைகளை நடத்திவருகின்றது.

## சந்திரிகா...

நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லமுடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய...

னாள் தளபதி அட்மிரல் மாதவேந்திரசிங்கும் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை கடல் எல்லையில் இந்தியக் கடற்படையினரின் கண்காணிப்புத் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையிலேயே, இந்தியக் கடற்படையின் தலைமைத் தளபதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## பிரபாகரனுக்கான...

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைச்சரவை ஆகியவற்றுக்கு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் அரசாங்கத்தின் அரசியல் யாப்பை மீறிச் சென்றுள்ளதாக மனுதாரர்கள் தெரிவித்தனர்.

இதனால் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய உத்தரவைப் பிறப்பிக்குமாறு மனுதாரர்கள் சார்பில் கேட்கப்பட்டுள்ளது.

## எம்மீது...

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் மிகத்தெளிவாக உள்ளனர். ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளே சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளன என்றும் பெரியசாமி சந்திரசேகரன் மேலும் தெரிவித்தார்.

# கொழும்பு நகரில் வைத்து 4 தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

கொழும்பில் சிறிலங்கா ரெலிக்கொம் தலைமையகத்துக்கு முன்பாக நடமாடியதாக நான்கு தமிழ் இளைஞர்களைப் படையினர் கைது செய்தனர்.

நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணியளவில் கொழும்பு சேர் பாரன் ஜெயதிலக மாவத்தையில் உள்ள கபூர் கட்டடத்தில் உள்ள ரெலிக்கொம் தலைமையகத்தை படம் பிடித்துக்கொண்டிருந்தபோதே இந்த நால்வரும் கைதுசெய்யப்பட்டதாக படையினர் தெரிவித்தனர்.

அன்ரனிப்பிள்ளை அலெக்ஸ், (வயது-18), அன்ரனிப்பிள்ளை அன்ரனி (வயது 16), ஜே.எஸ். டபிள்யூ நில்மன்ராஜ்,(வயது - 20) கமலேஸ் கிரிஷன்(வயது-23), ஆகிய நான்கு இளைஞர்களே கைதானவர்களாவர்.

சந்தேக நபர்கள் நால்வரும் மேலதிக விசாரணைகளுக்காக விஷேட பொலிஸ் விசாரணைப் பிரிவிடம் கையளிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# மகளை துஷ்பிரயோகப்படுத்திய இலங்கையரை அமெரிக்கா நாடு திருப்பி அனுப்பியது!

சிறுவர் துஷ்பிரயோக வழக்கொன்றில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பின்னர் அமெரிக்கா தப்பிச் சென்று, மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்ட இலங்கையர் எதிர்வரும் 10 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். நீர்கொழும்பு பிரதான நீதிவான் காந்தி வணிகசேகர முன்னிலையில் நேற்று நண்பகல் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

அத்துடன் இவரை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிவான் பணிப்புரை விடுத்துள்ளார்.

தனது ஐந்து வயது மகளை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட தேவனிகா அஸ்வின்குமார் சின்னத்தம்பிக்கு, கொழும்பு மேல் நீதிமன்றம் 2002 ஆம் ஆண்டு சிறைத் தண்டணை விதித்தது.

கடந்த யூன் மாதம் அமெரிக்காவுக்குச் தப்பிச்சென்ற இவர் அமெரிக்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு பின்னர் அவரை இலங்கைக்கு திருப்பியனுப்பி வைக்குமாறு அந்த நாட்டு குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் உத்தரவிட்டனர். இது நீதித்துறை மீதான நம்பிக்கையை வலுப்படுத்தும் நல் உதாரணம் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.